REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மே 11 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 110 | Thursday 11, May, 2023 | 12பக்கங்கள் | 50/-







## GSP வரிசலுகையை பெறுவதற்கு விண்ணப்பிக்க இலங்கை தயாராகிறது

### அனுமதிகோரி அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிப்பு

2024 - 34 காலப்பகுதிக்கான ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகைக்காக இலங்கை விண்ணப்பிக்குமென, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைக்கு விண்ணபிப்பதற்கான அனுமதியை கோரும் அமைச்சரவை

04



### முதலாவது மீளாய்வு கூட்டம் தொடர்பில் ஆராய

## IMF ஊழியர்கள் குழுவினர் இன்று இலங்கை வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று இலங்கை வருகிறது. கொழும்பிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம், இவ்வாண்டின் பிற்பகுதியில் திட்டமிடப்பட்ட முதல் மீளாய்வுப் பணிக்கு கூடவுள்ளது.

இதற்கு முன்னரான வழக்கமான ஆலோசனைகளின் ஒரு பகுதியாகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் குழு இன்று வருகிறது. இக்குழு, மே 11

04




### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்

## 6.4 பில்.டொலரை நட்ட ஈடாக பெற அரசாங்கம் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடாக 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக, இலங்கை சார்பாக சட்டமாஅதிபர் திணைக்களம் சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் (25) வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு

04



### இனப்பிரச்சினைக்கான தீர்வு; வடக்கு கிழக்கு அபிவிருத்தி

# ஜனாதிபதியை சந்திக்கும் வடக்கு, கிழக்கு எம்.பிக்கள்

### இன்றும் நாளையும் தொடர் சந்திப்புக்களை நடத்த தீர்மானம்



**ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்த இரா. சம்பந்தன் அது குறித்து இந்தியத் தூதுவருக்கும் எடுத்துரைத்த நிலையில் இன்று அவரது தலைமையில் வடக்கு, கிழக்கு எம்.பிக்கள் இணைந்து சந்திக்கின்றனர்.**

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான முதற்கட்ட பேச்சுவார்த்தை இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இன்று வியாழன் மற்றும் நாளை வெள்ளிக்கிழமை நாட்களில் நடக்கவுள்ள சந்திப்புகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் எம்.பிக்களை ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி ரணில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

04



## ஆதிலிங்கேஸ்வரனுக்கு 108 கலஷாபிஷேகம் வெடுக்குநாறி மலையில் பக்தர்கள் பங்கேற்பு



**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் 108 கலஷாபிஷேகம் நேற்று (10) சிறப்பாக நடைபெற்றது. வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் கடந்த பங்குனி மாதம் இறுதிப் பகுதியில் இனந்தெரியாதோரால் இடித்து

04



### டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு

03

## மலையக தொழிலாளர் பாதுகாப்புக்கு ILO வின் பங்களிப்பு மிகவும் அவசியம்

### உயர்மட்ட பிரதிநிதிகளுடனான சந்திப்பில் CWC வலியுறுத்து



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கு சர்வதேச தொழி லாளர் சம்மேளனத்தின் (ஐ.எல்.ஓ.) பங்களிப்பு அவசியம். இஇதற்காக உரிய தலையீடுகளை மேற்கொள்ளுமாறு ஐ.எல்.ஓவிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவை நினைவுகூரும் வகையில், முன்னெடுக்கப்படும் 'மலையகம் 200' வேலைத்திட்டங்களில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் பங்கேற்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர்

04

## நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் கப்பல் விவாதம்

### எக்ஸ்பிரஸ் பேர்ள் விவாதத்தை முன்னெடுக்க கட்சித் தலைவர்கள் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தொடர்பான விவாதத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க நேற்றைய விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை, நேற்றும் இன்றும் நடத்த தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய நேற்றுக் காலை விவாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இது குறித்து வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றபோது, எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் தொடர்பில், சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் இது

04

## போதைப்பொருள் வர்த்தகருடன் விருந்துபசாரத்தில் பங்கேற்பு

### இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பணி இடைநிறுத்தம்

இரவு விடுதியொன்றில் போதைப்பொருள் வர்த்தகரொருவருடன் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட, இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களை பணி இடைநிறுத்தம் செய்ய பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.




கடந்த (07) இரவு கல்கிசை சேரம் வீதியிலமைந்துள்ள விடுதியொன்றில் இந்த விருந்துபசாரம் நடைபெற்றது.


இதில்,விடுதியில் பணிபுரியும் பெண்ணின் தலையில் போதைப்பொருள் வர்த்தகர் கண்ணாடி குவளையால் தாக்கி பலத்த காயம் ஏற்படுத்தியதாகவும்

04

## கொன்சியூலர் பிரிவின் கணினி கட்டமைப்பில் திடீர் கோளாறு

### மறு அறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடு

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவிலுள்ள கணினி கட்டமைப்பில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், கொழும்பிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி, குருநாகல் பிராந்திய அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆவண அங்கீகார செயன்முறை மறுஅறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்படவுள்ளது.




04

## இம்ரான் கானை எட்டு நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு

### பாகிஸ்தான் முழுவதும் வன்முறை; 1,000 பேர் வரையில் கைது

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானை எட்டு நாட்கள் விளக்கமறியலில் வைத்து விசாரண செய்வதற்கு அந்நாட்டின் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.



அல் காதிர் நம்பிக்கை நிதியம் தொடர்பான வழக்கில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக விசாரிப்பதற்காகவே அவர் விளக்கமறியலில் வைக்கப்படடுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கைது

04



### 25,000 குடும்பங்களுக்கு இலவச சூரிய மின் சக்தி

அமைச்சரவை அனுமதித்த பின் ஆரம்பம்

03



### களுத்துறை சிறுமியின் மர்ம மரணம் பிரதான சந்தேக நபர் அதிரடிக் கைது

48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை

03



### போலி நாணயத்தாள் அச்சிடும் இயந்திரத்துடன் இளைஞர் கைது

ரூ. 1.3 மில். நாணயத்தாள்கள் மீட்பு

08

## அதிக விலைக்கு முட்டைகளை கொள்முதல் செய்ய வேண்டாம்

### முட்டை உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை

முட்டைகளுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட, முட்டைகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியுமென அகில இலங்கை முட்டை

04



## நுவரெலியா நகரில் கேபிள் கார் திட்டம்

### சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நுவரெலியாவில் கேபிள் கார் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

திட்டத்தை

04



## எலிக்காய்ச்சல் பரவல் மீண்டும் அதிகரிப்பு

### மருத்துவ சபை முன்னெச்சரிக்கை

எலிக் காய்ச்சலின் தாக்கம், தற்போது கணிசமாக அதிகரித்துள்ளதாக, இலங்கை மருத்துவ சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று

04



## எரிபொருள் ஆட்டோக்களை மின்சாரத்துக்கு மாற்றும் திட்டம்

### இன்று முதல் ஆரம்பிக்க RMV தீர்மானம்

எரிபொருளில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றும் திட்டம் இன்று (11) முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன் முதற்கட்டமாக 300 பெற்றோல்

04



# நாட்டில் வாழும் சகல இன மக்களும் சுதந்திரமாக வாழும் காலம் கனிந்துள்ளது




## மலேசிய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி

**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கை யில் வாழும் சகல இனத்தவர்களும் சுதந்திரமாக தத்தம் மத அனுஷ்டானங்களை நிறைவேற்றக்கூ டி ய காலம் உதயமாகியுள்ளதாக வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். இலங்கைக்கான மலேசியா உயர் ஸ்தானிகர் பாதில் ஹி ஸாம் அடம் மற்றும் திருமதி ஹிஸாம் அடம் ஆகியோர்கள் இணைந்து மலேசியா உயர்ஸ்தானிகர் இல்லத்தில் ஈத் முபாரக் மற்றும் ஹரி ராய அடிபிட்ரி வரவேற்பு வைபவம் என்பவற்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் வாழுகின்ற தமிழ் சிங்கள மக்கள் ஹிந்து புதுவருடத்தையும் முஸ்லிம்கள் இப்தார் மற்றும் நோன்புப் பெருநாள் தினத்தையும் பௌத்த மக்கள் வெசாக் தினத்தினையும் வெகு சிறப்பாக அமைதியாக இம்முறை கொண்டாடினார்கள்.

1999ஆம் ஆண்டில் வெளிநாட்டு அமைச்சராக இருந்த காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் ஐ. நாடுகள் சபையில் வெசாக் தினத்தினை உலக வெசாக் தினமாக பிரகடனப்படுத்தி அத்தினத்தில் விடுமுறை ஒன்றையும பெற்றுக் கொடுத்தமையை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகிறேன். மேலும் மலேசிய அரசாங்கம் எமது நாட்டின் தொழில் வாய்ப்பு, வர்த்தகம், கல்வித்துறையில் இலங்கையுடன் நீண்டதொரு நட்புறவினைப் பேணி வருவதினை நான் பாராட்டுவதாகவும் வெளிநாட்டு அமைச்சர் இதன் போது தெரிவித்தார். இந் நிகழ்வில் அமைச்சர்களான நசீர் அஹமட், பந்துல குணவர்த்தன, விதுர விக்கிரமநாயக்க, மத்திய வங்கி ஆளுநர், இலங்கையில் உள்ள ஏனைய நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொண்டனர்.



ஈரான் அரசாங்கம் சுமார் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான புற்று நோய் மருந்துகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் ஈரான் தூதுவர் ஹசாம் அஸ்ஜாசதா – சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி வைத்தார். (படம் அஷ்ரப் ஏ சமத்)

## கட்டாய மதமாற்றங்களை தடுக்க மதத்தலைவர்கள் முன்வர வேண்டும்

### ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் ஆனந்தகுமார்




மதமாற்றங்கள் தொடர்பில் அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகள் நாட்டில் எழுந்துள்ளன. கட்டாய மத மாற்றம் என்பது பொதுவாக அனைத்து நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட விடயமாகும். அதேபோன்று இலங்கையிலும் கட்டாய மதமாற்றங்கள் எங்கு இடம்பெற்றாலும் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு மதமாயினும் உரிய விழிப்புணர்வையும் சமய நெறிமுறைகளையும் மக்களுக்கு வழங்கினால் மத மாற்றங்களை தடுக்க முடியும் என ஜனாதிபதியினால் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காண நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட குழு உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் அதிகமானோர் மத மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. எவராயினும் விரும்பி ஒரு மதத்தை தழுவிக்கொள்வது அவரது மத சுதந்திரம். ஆனால், வறுமை அல்லது இயலாமையை பயன்படுத்தி கட்டாய மதமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதை ஏற்றுகொள்ள முடியாது. எந்த மதத்தை சார்ந்தவர்களாயினும் அவ்வாறு செயல்பட்டால் அது ஏற்புடையதல்ல. மதம் சார்ந்த அறிவூட்டல்கள், விழிப்புணர்வுகள் மற்றும் பிரசங்கங்களை மக்களுக்கு வழங்க மதத்தலைவர்கள் தமது பிரதேசங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய பிரசங்கங்களை போதித்தால் தத்தம் மதங்கள் சார்ந்த விழிப்புணர்வை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்து மதஸ்தலங்களிலும் வாராவாரம் பிரசங்கங்கள் மூலம் மக்களுக்கு நெறிமுறைகளையும் மதம் சார்ந்த விடயங்களை வழங்குவதன் ஊடாக மத மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படும் என்பதுடன் கட்டாய மதமாற்றங்களையும் தடுக்க முடியும்.

வறுமை மற்றும் அறியாமையை பயன்படுத்தியே இலங்கையில் மத மாற்றங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனை தடுக்க சமயம் பற்றிய தெளிவான புரிதலை மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.





முத்தமிழ் மன்றத்தால் கத்தாரில் நடாத்தப்பட்ட சித்திரைத் திருவிழா கவியரங்கில் கௌரவ விருந்தினராகப் பங்குகொண்ட காப்பியக்கோ ஜின்னாஷரிபுத்தீன் கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

## இலங்கை மற்றும் மாலைதீவு ரோட்டரி கழக ஆளுநராக ஜெரோம் ராஜேந்ரம் தெரிவு



**ருஸைக் பாரூக்**

ரோட்டரி மாவட்ட 3220 இலங்கை மற்றும் மாலைதீவு 2023 / 24ம் ஆண்டுக்கான மாவட்ட ஆளுநராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜெரோம் ராஜேந்ரம் அவர்களின் நியமன வைபவம் ஷாங்க்ரிலா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இந்தியாவை சேர்ந்த ரோட்டரி சர்வதேச பணிப்பாளர் டீ. என். சுப்ரமணியன், முன்னாள் தலைவர் கே. ஆர். ரவீந்திரன் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர் .

டோஸ்ட் மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் அருணாசலம் பைராஜ் , Axiata Digital Labs மற்றும் Lanka Angel Network தலைவர் நயோமினி வீரசூரிய விஷேட பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு; சந்தேகத்தில் மூவர் கைது விசாரணைகள் முன்னெடுப்பு

**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்.**

பொலிஸ் உத்தியோகத்தர்களது கடமைக்கு இடையூறு விளைவித்து அவர்களை தாக்கி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை ஹொரவபொத்தான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கபுகொள்ளேவ பொலிஸ் பிரிவின் அலியாகட பகுதியில் இச்சம்பவம் 09ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்கள் 21, 23, 24 வயதுடைய கபுகொள்ளேவ அலியாகட பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, முறைப்பாடு ஒன்றினை விசாரணை செய்வதற்காகச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்கள். காயமடைந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்சமயம் கபுகொள்ளேவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## புதுடில்லி சூபி தர்காவில் பாக். யாத்திரிகர்கள் வழிபாடு



புதுடில்லியில் அமைந்திருக்கும் சூப்பி மகான் ஹஸ்ரத் அமீர் குஸ்ரோ அடக்கப்பட்டிருக்கும் தர்காவுக்கு இந்தியாவுக்கான பாக். துணைத் தூதுவர் சல்மான் ஷரீப் தலைமையில் பாகிஸ்தான் யாத்திரிகர் குழுவொன்று வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டது.

இம் மகானின் 719 ஆவது நினைவு தின வழிபாடுகளில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த 104 பாக். யாத்திரிகர்களையும் துணைத்தூதுவரையும் தர்கா பரிபாலன குழுத் தலைவர் சஜ்ஜாதா நசின் தாயிர் வரவேற்றார். பின்னர் அடக்கஸ் தலத்துக்கு சதார் சால்வை போர்த்தி, பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் நலன்களுக்காக அவர்கள் பிரார்த்தித்தனர். பின்னர் அதே தர்காவில் அடக்கப்பட்டிருக்கும் புனிதரான அஸ்ரத் நிஸாமுதீன் அவுலியாவுக்கு அவர்கள் மரியாதை செய்து பிரார்த்தித்தனர். இங்கு உரையாற்றிய துணைத் தூதுவர் சல்மான் ஷரீப் அன்பு, சமாதானம், ஒற்றுமை மற்றும் மதச் சகிப்புத் தன்மை ஆகிய பண்புகளை பரப்பிய சூபி மகான்களின் பெருமை குறித்து பேசினார்.

பின்னர் தமது இந்திய பயணத்தின் போது செய்து தரப்பட்ட வசதிகளுக்காக பாக். தூதரகத்துக்கு யாத்திரிகர்கள் நன்றி தெரிவித்தனர். 1974 இந்தோ – பாக் உடன்படிக்கையின் கீழ். பாக் யாத்திரிகர்கள் இந்தியாவுக்கு வருகை தர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காகித பாவனையற்ற வர்த்தகத்தை கைக்கொள்ள இந்தியா ஆலோசனை

### ஜி 20 மாநாட்டில் முன்வைக்கப்படும்




சர்வதேச வர்த்தக தொடர்புகளை வெகு விரைவாகவும் காகித பாவனையற்றதாகவும் நடத்துவது தொடர்பான யோசனையை ஜி20 மாநாட்டில் முன்வைப்பதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது.

வங்கிகளுக்கு இடையிலான உலகளாவிய நிதி தொடர்பான தகவல் பரிமாற்றங்களுக்கு ஏற்கனவே வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் 'ஸ்விப்ட்' என்றொரு முறைமையை பயன்படுத்தி வருகின்றன. இது நிதி விவகாரங்களை விரைவாகக் கையாள உதவுகிறது.

இது போன்ற ஒரு நடைமுறையை சர்வதேச வர்த்தகத்திலும் பயன்படுத்தினால் வர்த்தக பரிமாற்றங்களை விரைவாகவும், நம்பிக்கையாகவும் காகித பாவனையற்றதாகவும் செய்து முடிக்கலாம் என இந்தியா கருதுகிறது.

ஏற்கனவே பிரிட்டன் இலந்திரன் வர்த்தக சட்டமொன்றை ஐ.நா. சர்வதேச வர்த்தக ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நிறைவேற்றியிருப்பதால் அதைப் பின்பற்றி நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை காகித பாவனையற்றதாக மாற்றிவிட முடியும் என்பது இந்தியாவின் யோசனையாகும். வர்த்தக தொடர்புகளை காகிதமற்றதாக மாற்றி அமைப்பதன் மூலம் வளர்ந்த நாடுகளும் வளரும் நாடுகளும் அதிக பயன் பெற முடியும் என இந்திய உயர் வணிக வட்டாரங்கள் கருதுகின்றன. வர்த்தக கட்டளைகள், பணக் கொடுப்பனவு தொடர்பாக ஒரு பொதுவான தளத்தை உருவாக்கினால், நாடுகளுக்கு இடையிலான பொருள் கொள்வனவு கட்டளை, பணக் கொடுப்பனவு, ஏற்றி இறக்குதல், காப்பீடு போன்ற பல்வேறு விஷயங்களை காகித பாவனையின்றி வேகமாக செய்து முடிக்கலாம் எனக் கருதும் இந்திய வர்த்தக ஆலோசகர்கள், இந்திய சுங்கம் காகித பாவனையற்ற சுங்கத் தீர்வையை ஏற்கனவே அறிமுகம் செய்திருப்பதை உதாரணமாக சுட்டிக் காட்டுகின்றனர்.

## மத்திய கிழக்கு பாதுகாப்பு தொடர்பாக ரியாத்தில் மாநாடு

### அமெரிக்க, இந்திய, அமீரக ஆலோசகர்கள் பங்கேற்பு



மத்திய கிழக்கு பிராந்தியத்தை அதிக பாதுகாப்பானதும் செழிப்பானதாகவும் வைத்திருப்பது தொடர்பான தமது பங்களிப்புகளை உறுதி செய்யும் வகையிலான கூட்டமொன்றை இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய அமீரகம் மற்றும் சவூதி அரேபிய நாடுகள் தலைநகர் ரியாத்தில் கடந்த ஏழாம் திகதி நடத்தியிருந்தன.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுலிவன், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், அமீரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஷேன் தனூன் பின்சையிட், சவூதி பிரதமர் மொஹமட் பின் சல்மான் ஆகியோர் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக வெள்ளை மாளிகை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நான்கு தரப்புகளும் தொடர்ச்சியாக சந்தித்து ஆலோசனைகளை பகிர்ந்து கொள்ளவும் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும் உடன்பட்டதாகத் தெரிகிறது. அமெரிக்க ஆலோசகர், அமீரக பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் இந்திய பாதுகாப்பு ஆலோசகருடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு, அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள குவாட் உச்சி மாநாட்டின் வரம்புகள் தொடர்பாக அஜித் டோவலுடன் பேசுவதற்கு திட்டமிட்டிருந்தார்.

தற்போது யேமனில் நடைமுறையில் இருக்கும் 15 மாதகால போர் நிறுத்தத்தை மேலும் உறுதிப்படுத்துவது தொடர்பாகவும் யுத்தத்தை முற்றாக நிறுத்தும் ஐ.நா.வின் முயற்சிகளுக்கு ஆதரவு தருவது தொடர்பிலும் சுலிவன், சவூதி பிரதமருடன் பேசினார்.

சமீபத்தில் அஜித் டோவல் ஈரானிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலிஷம் கனி மற்றும் ஈரானிய உதிஉயர் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளருடன் பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பேசியிருந்தார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மே 11 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
லுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் சித்திரை 28
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## 25,000 குடும்பங்களுக்கு இலவச சூரிய மின் சக்தி

### அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் ஆரம்பம்



குறைந்த வருமானம் பெறும் 25,000 குடும்பங்களுக்கு இலவச சூரிய மின் கலங்களை வழங்கும் நடவடிக்கை, அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்படுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.


இதன்மூலம் 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை தேசிய மின் கட்டமைக்கு சேர்க்க எதிர்பார்ப் பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக 10,000 வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 15,000 வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு

### மாகாண பிரதம செயலர்களுக்கு செயலாளர் எழுத்து மூலம் அறிவிப்பு



டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு , மாகாண செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்து மூலம் (09) அறிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் இந்த அறிவித்தலை அவர் விடுத்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப, பிரதம செயலாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு பொலிஸாருக்கும் முப்படைக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் நாடு முழுவதும் 1896 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர். மேல் மாகாணத்திலே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 49% ஆகும்.

மேல் மாகாண டெங்கு நோயாளர்களில் 21% கம்பஹா மாவட்டத்திலும்,18% கொழும்பு மாவட்டத்திலும், 7% களுத்துறை மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது.அவற்றில் 3.4% டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர்.

இது தவிர, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களிலிருந்தும் அதிகமான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.


கடந்த வாரம் மேல் மாகாணத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் துரித டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன .

இவ்வருடம் கொழும்பு மாவட்டத்தில் 6,678 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 7,166 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 1,902 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதோடு மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 15,746 ஆகவுள்ளது.

அனுராதபுரம் மாவட்டத்தில் 209 டெங்கு நோயாளர்கள் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் 155 டெங்கு நோயாளர்களுமாக

04

## இறைவரி (திருத்தம்) சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்



அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2023 மே மாதம் 08 ஆம் திகதி "இறைவரி (திருத்தம்)" சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (10) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்தச் சட்டமூலம் கடந்த ஏப்ரல் (28) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய, சபாநாயகர் இதை, சான்றுரைப்படுத்தியதையடுத்து இறைவரிச் (திருத்தம்) சட்டமூலம், 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறைவரிச் (திருத்தம்) சட்டமாக நடைமுறைக்கு வருகின்றது.

## 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் நான்கு மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று காலை 9.30 மணி வரை மண்சரிவு எச்சரிக்கை அமுலிலிருக்குமென தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி கண்டி மாவட்டத்தில் உடுதும்பர பிரதேச செயலாளர் பிரிவுக்கும், குருநாகல் மாவட்டத்தின் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவுக்கும் இன்று காலை 09 மணி வரை மண்சரிவு எச்சரிக்கை அமுலில் இருக்கும்.

மேலும், காலி மாவட்டத்தில் உள்ள பத்தேகம, நாகொட, எல்பிட்டிய மற்றும் யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவுகளிலும், யட்டியந்தோட்டை, ரம்புக்கனை, தெரணியகல, மாவனெல்ல, கேகாலை மற்றும் கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இந்த முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பில் சபைக்குள் கடும் சர்ச்சை

### 40 நிமிடங்கள் சபை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பாராளுமன்றம் நேற்றுக்காலை 10 .20 மணியளவில் பத்து நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுவதற்காக, சபை நடவடிக்கைகளை பத்து நிமிடங்களுக்கு ஒத்தி வைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.இதையடுத்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தம் தொடர்பில், நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சபை ஒத்தி வைப்பு வேளை விவாதம் நடைபெற்றது. சபை ஒத்திவைப்பு பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்போது, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன் வைத்தார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதால், அந்த விடயத்தை பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது சட்டத்துக்கு முரணானதென அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இதன் போது குறிப்பிட்டார். ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து அவர் சபையில் கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருந்த போது, எதிர்க்கட்சியிலிருந்து பலத்த எதிர்ப்புகள்

04

களுத்துறை சிறுமியின் மர்ம மரணம்

## பிரதான சந்தேக நபர் அதிரடிக் கைது

### 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை



களுத்துறையில் 16 வயது சிறுமி மர்மமான முறையில் மரணமான சம்பவத்துடன் தொடர்புடைய 29 வயதான பிரதான சந்தேகநபரை, 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை நடத்த பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை விடுதியொன்றின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்து சிறுமியொருவர் மரணமானார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான

04

# கீழ் மல்வத்து ஓயா திட்டத்தை விரைவில் மீண்டும் ஆரம்பிக்குமாறு பிரதமர் பணிப்பு



தேவையான நிதியை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள கீழ் மல்வத்து ஓயா திட்டத்தை, விரைவில் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து கண்டறியுமாறு (09) பிரதமர் தினேஷ் குணவர்த்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

யான் ஓயா அணைக்கட்டை நிர்மாணித்த *Sinomach China CAMC* பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவை ஆராய்ந்த பின்னரேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கீழ் மல்வத்து ஓயா திட்ட ஒப்பந்தத்தையும் யான் ஓயா ஒப்பந்தத்தையும் இணைக்கும் வாய்ப்புகள் குறித்து ஆராயுமாறு பிரதமர் அதிகாரிகளிடம் கூறியதுடன், நீரின் மேல் மிதக்கும் சூரிய சக்தி மின் தகடுகளை அமைத்து பாரிய அளவில் சூரிய மின் உற்பத்தி செய்யும் வாய்ப்பு குறித்தும் பிரதமர் சுட்டிக்காட்டினார். இத்தகையதொரு திட்டத்தின் மூலம் தேசிய மின்சக்தி திட்டத்திற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய

04


**2015 இல 05 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் கட்டளைப் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல் - 'யூனியன் பார்மசி' - வெள்ளவாய**

எமது நிறுவனத்தின் காலாவதியான, 10 வகையான ஔடதங்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்வதற்காக அடுக்கி வைத்திருந்தமைக்காக வெள்ளவாய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இல. 56797 இன் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில் நான் குற்றவாளியாக்கப்பட்டேன் எனவும், அதுசார்பாக ரூ. 100,000/- தண்டப்பணத்தை செலுத்தியதாகவும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். மேற்படி குற்றம் சார்பாக இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

**எஸ். ஹெட்டியாரச்சி**
**யூனியன் பார்மசி**
**வெள்ளவாய**



எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் பிஎல்சி

## விலைமனு அறிவித்தல்

கீழ்க்காணப்படும் மரங்களை விற்பனை செய்வதற்காக பெறுகைக்குழுவினால் முத்திரைக்குறி இடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெருந்தோட்டம் | பிரிவு | வகை | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தெவித்துறை | கொக்கரகந்த | அல்ஸ்டோனியா | 75 |
| | | அல்பிஸியா | 07 |

அனைத்து விலைமனுக்களும் 2023 மே மாதம் 22 அன்று பி.ப.4.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் முத்தியரையிடப்பட்ட உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "மரங்களின் விற்பனை" எனக் குறிப்பிட்டு பிரதான நிறைவேற்று அலுவலர், எல்பிட்டிய பெருந்தோட்டங்கள், PLC என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மீளளிக்கப்படாத ரூபா 1,000/= மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 5000/- ஐ ஒவ்வொரு தோட்டப்பிரிவுக்கும் செலுத்தி 2023 மே மாதம் 22 வரை மு.ப.8.30 முதல் பி.ப.4.00 வரை இதற்கான விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பெருந்தோட்டத்தின் சிரேஷ்ட முகாமையாளரிடம் முன்னேற்பாட்டு சந்திப்பு செய்து கொண்டு வார வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.4.00 வரை இம்மரங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள் பதிவுத்தபாலில் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படலாம்.

எவ்வாறாயினும், எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனியானது எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும் எக்காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**பிரதான நிறைவேற்று அலுவலர்**
**எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLC**
**9ஆம் மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் கோரபுரம் - 01**
**305, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு - 02**
**தொ.பே : 011-4693000**


தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.05.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5109 | ரூ. 18,249,603.00 | P | 8 9 2 7 2 8 |
| ஜாதிக சம்பத | 1564 | ரூ. 10,761,618.00 | வெற்றி இலக்கினம்: துலாம் | 5 7 0 0 3 4 |
| தன நிதானய | 1139 | ரூ. 89,123,572.40 | E | 04 20 36 67 |
| ராசி சுப பலன் Handahana | 418 | ரூ. 2,500,000.00 | வெற்றி இலக்கினம்: மீனம்; விசேட இலக்கினம்: மீனம் | 18 48 51 62 |
| கொவிசெத Govisetha | 3351 | ரூ. 102,015,240.64 | J | 49 54 72 75 |
| மெகா பவர் | 1457 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 319,984,778.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | A; சுப்பர் இலக்கம் 24 | 22 38 54 58 |

## வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABK-1212 | பஜாஜ் | 2016 | ராகம |
| AAZ-2130 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABJ-3733 | பஜாஜ் | 2015 | கண்டி |
| AAT-6613 | பஜாஜ் | 2014 | ரத்தினபுரி |
| YX-8527 | பஜாஜ் | 2012 | அனுராதபுரம் |
| AAE-3933 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| AAF-8064 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| YV-8687 | பஜாஜ் | 2011 | ராகம |
| YQ-2883 | பஜாஜ் | 2011 | குருநாகல் |
| QS-8697 | பஜாஜ் | 2009 | ரத்தினபுரி |
| QM-6676 | பஜாஜ் | 2007 | ராகம-2 |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KO-1882 | டொயோட்டா | 2009 | ராகம |
| KQ-7082 | டொயோட்டா | 2008 | குருநாகல் |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 51 SRI 0481 | ISUZU | 1989 | ராகம |
| PS-6697 | மகேந்திரா | 2012 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| BEZ-1151 | பஜாஜ் | 2017 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0773 951 796
ரத்தினபுரி 0774 857 351
அனுராதபுரம் 0767 139 916
குருநாகல் 0764 425 205
கண்டி 0773 972 860
பாணடுரா 0775 215 263

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

## ஜனாதிபதியை சந்திக்கும்...

தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின்போது ஜனாதிபதி தரப்பில் வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரே நேரத்தில் சந்திக்க இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண எம்.பிக்களை அழைக்காமல் வட மாகாண எம்.பிக்களை மாத்திரம் ஜனாதிபதி சந்திக்க முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், இந்த சந்திப்பில் இதுவிடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி அந்த முடிவை மாற்றியுள்ளதாக கூட்டமைப்பு தரப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு – கிழக்கின் தனியலகு தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த ஒப்பந்தத்தின் பிரகாரமே இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான முழு விபரங்களையும் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கு எடுத்துரைத்த போதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இரா சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் முதலில் சந்திப்பு நடைபெற்றது. வடக்கு – கிழக்கில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்பேசும் மக்கள். எந்த விடயமானாலும் வடக்கு – கிழக்கைப் பிரித்து செயற்றிட்டங்களை முன்னெடுக்க இடமளிக்கமாட்டோம். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு – கிழக்கின் தனியலகு தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரமே தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வடக்கு – கிழக்கைப் பிரித்து பேச்சு நடத்த விரும்பினால், எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அதில் பங்கேற்கமாட்டார்களென ஜனாதிபதியிடம் தெரிவித்தோம்.

எமது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, வடக்கு – கிழக்கை இணைத்துத்தான்,சகல பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுமென பதிலளித்தார்.

ஜனாதிபதியுடனான பேச்சு முடிவடைந்த பின்னர் இந்தியத் தூதரகத்துக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா, கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் சென்றேன்.

சந்திப்பில், பேசப்பட்ட விடயங்களை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் விரிவாக எடுத்துரைத்தோம் என்றும் அவர் தெவித்தார்.

## இம்ரான் கானை எட்டு நாட்களுக்கு...

செய்யப்பட்ட இம்ரான் கான், இஸ்லாமாபாத்தில் பொலிஸ் தலைமையகத்திலுள்ள விசேட நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். இம்ரான் கானை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வேண்டுமென அரச தரப்பு சட்டத்தரணிகள் கோரினர். இதற்கு இம்ரான் கானின் சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவித்தார்.

இம்ரான் கான் கைது செய்யப்பட்டபோது, பிடியாணை ஆவணம் அவருக்கு காண்பிக்கப்பட்டதென தேசிய பொறுப்புல் கூறல் பணியகத்தின் (என்ஏபி) சட்டத்தரணி கூறினார். ஆனால், இம்ரான் கான் கைது செய்யப்பட்ட போது அவருக்குப் பிடியாணை காண்பிக்கப்படவில்லை எனவும் என்ஏபி அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்படும் வழியிலேயே, அந்த ஆவணம் காண்பிக்கப்பட்டதெனவும் இம்ரான் கானின் சட்டத்தரணி கூறினார்.

இறுதியில் இம்ரான் கானை 08 நாட்கள் விளக்கமறியலில் வைத்து விசாரிப்பதற்கு பொறுப்புக்கூறல் பணியகத்துக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அதேவேளை, டோஷாகானா ஊழல் வழக்கு தொடர்பிலும் இம்ரான் கானுக்கு நீதிமன்றம் குற்றப்பத்திரத்தை கையளித்தது.

இம்ரான் கான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அனுமதியளிக்கப்பட்டவர்கள் மாத்திரமே நீதிமன்றத்துக்குள் அனுமதிக்கப்படுவரென இஸ்லாமாபாத் பொலிஸார் அறிவித்திருந்தனர். நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீதிகள் மூடப்பட்டிருந்தன.

இம்ரான் கான் கைதை அடுத்து அவரது கட்சியினர் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர். வீதிகளில் திரண்ட அவர்கள் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதை கண்டித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தின் போது வன்முறை வெடித்தது. பொலிஸ் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. பல இடங்களில் பொலிஸாருக்கும், போராட்டகாரர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டன. பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாகிஸ்தான் முழுவதும் பதற்றம் நிலவி வருகின்றது. வன் முறையில் ஒருவர் பலியாகியுள்ளார்.சுமார் 1,000 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 6.4 பில். டொலரை நட்ட ஈடாக...

எடுத்துக்கொள்ளப்பட்டது.இவ்வழக்கு மீண்டும் (15) இல், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதே போன்று, கப்பலின் மாலுமி கப்பலை சட்டவிரோதமான முறையில் செலுத்தியுள்ளதாக தெரிவித்து அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய நிலையில், பாராளுமன்றத்தில் நீதிமன்ற தீர்ப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பொறுப்பற்ற முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இது, எமது நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட இடமுண்டு. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை அரசாங்கம் மறைக்க முற்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவே, அரச தரப்பு இந்த விவாதத்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

எனினும், நிலையியற் கட்டளையின் கட்டளைக்கு இணங்க இந்த விவாதத்தை நடத்த முடியாது. அதனால் இந்த விவாதத்தை நடத்துவதா? இல்லையா? என சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு விடயங்களை விவாதிப்பதால், அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. இதனால் விவாதத்தை நடத்தாமல் இருப்பதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச சபையில் கேட்டுக்கொண்டார்.

## கொன்சியூலர் பிரிவின் கணினி...

சுமுகமான ஆவண அங்கீகார செயன்முறைக்கு மிகுந்த முக்கியத்துவமளிக்கும் முகமாக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு துரிதமான திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தற்போது, மிகவும் அவசரமான ஆவணங்களுக்கு மட்டுமே கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு அங்கீகாரமளிப்பதுடன், கணினி கட்டமைப்பு பழுதுபார்க்கப்பட்டவுடன் ஏனைய ஆவணங்களுக்கு அங்கீகாரமளிக்கப்படும். ஏனைய கொன்சியூலர் சேவைகள் எந்தவித தடங்கலுமின்றி தொடர்கின்றன. அங்கீகார செயன்முறை முழுமையாக செயற்படுத்தப்பட்டவுடன் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். தொழிநுட்பக் கோளாறால் பொதுமக்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அதற்காக வருத்தமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் குறித்து, பொதுமக்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்:

கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு, கொழும்பு – 0112338812, பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம் – 0212215972, பிராந்திய அலுவலகம், திருகோணமலை – 0262223182/86, பிராந்திய அலுவலகம், கண்டி – 0812384410, பிராந்திய அலுவலகம், குருநாகல் – 0372225931, பிராந்திய அலுவலகம், மாத்தறை – 0412226713 / 0412226697

## மலையக தொழிலாளர் பாதுகாப்புக்கு...

சம்மேளனத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினருக்கும் இடையிலான சந்திப்பு, இ.தொ.கா. தலைமையகத்தில் நேற்று (10) நடைபெற்றது. சம்மேளனத்தின் சார்பில் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிநிதி ஏரியல் கெஸ்ட்ரோ, நிபுணர் ஷைட் சுல்தான் அகமட் ஆகியோரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிர்வாக செயலாளர் விஜயலக்ஷமி தொண்டமான், தொழிற்சங்க பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் எஸ். ராஜமணி ஆகியோரும் பங்கேற்றனர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உட்பட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான பாதுகாப்பு பொறிமுறை, சர்வதேச தொழில் சம்மேளனத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் ஐ.எல்.ஓ. வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்காலத்திலும் ஒத்துழைப்புக்கள் அவசியம் எனவும் கேட்டுக்கொண்டார்.

## நீதிமன்ற நடவடிக்கைக்கு...

குறித்து கருத்து தெரிவிக்க முடியாதென நீதி அமைச்சர் தெரிவித்தார். இதனையடுத்து, பாராளுமன்றத்தில் சலசலப்பு ஏற்பட்டதால் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்புவிடுத்து, சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்த்தன சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார். எனினும், சுமார் 40 நிமிடநேரத்துக்கு மேலாக சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகியதுடன், எக்ஸ்பிரஸ் பேர்ள் வழக்குக்கு இடையூறு ஏற்படாத வகையில் திட்டமிட்டபடி விவாதங்களை முன்னெடுப்பதற்கு கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் அதன்போது சபையில் அறிவித்தார். விவாதத்தில், சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பான கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

## அதிக விலைக்கு முட்டைகளை...

உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி அதிக விலை கொடுத்து முட்டைகளை வாங்க வேண்டாமென நுகர்வோரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் கூறினார்.

ஒரு வெள்ளை முட்டை மொத்த விலையில் 40 ரூபாவுக்கும், பழுப்பு நிற முட்டை 41 ரூபாவுக்கும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. பேக்கரிகளிலிருந்து 44 45 ரூபாவுக்கு முட்டை கொள்முதல் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபாவாகவும், பழுப்பு நிற முட்டை ஒன்று 46 ரூபாவாகவும் நுகர்வோர் அதிகாரசபை கட்டுப்பாட்டு விலையை பிறப்பித்துள்ள போதிலும், இம்மாத இறுதிக்குள் முட்டையின் விலை மேலும் குறைவடையுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## IMF ஊழியர்கள் குழுவினர்...

முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளார்.

சர்வதேச நாணய நிதிக் கடன் தொடர்பிலான முதலாவது மீளாய்வு இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ளது. இதன் நிமித்தம் பிரதிநிதிகள் வழமையான கலந்தாலோசனைகளுக்காக இவ்வாறு இலங்கை விஜயம் செய்யவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய வலய பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் இந்த பிரதிநிதிகளுடன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

## ஆதிலிங்கேஸ்வரனுக்கு 108...

அழிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக கடந்த மாதம் 28 ஆம் திகதி மீளவும் தெய்வ திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டு, தொடர்ச்சியாகப் பன்னிரெண்டு நாட்கள் பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

அதன் தொடர்ச்சியாக நேற்று (10) 108 கலஷாபிசேகம் சிறப்பாக நடைபெற்றது. இதில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வருகை தந்த பக்த அடியார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## போதைப்பொருள் வர்த்தகருடன்...

பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவத்தில் போதைப்பொருள் கடத்தல்காரரை பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிக்க வைப்பதற்கு கான்ஸ்டபிள்கள் இருவரும் உதவி செய்திருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குற்றம் புரிந்தவர் தப்பிச்செல்ல உதவியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கல்கிசை குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## நுவரெலியா நகரில்...

ஆரம்பிப்பதற்கு தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சபையின் தலைவர் சம்பத் பிரசன்ன பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கை மேம்படுத்தும் வகையில், இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை முன்னிட்டு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், உலகின் புகழ்பெற்ற இசைக் குழுக்களை இலங்கைக்கு வரவழைத்து, இரவு வேளையில் இசை நிகழ்ச்சிகளை நடத்த எதிர்பார்ப்பதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சம்பத் பிரசன்ன பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## GSP வரிசலுகையை பெறுவதற்கு...

பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு செயற்பாடுகள் சேவைப்பிரிவின் ஆசிய பசுபிக்கின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் பவோலா பம்பலோனியுடன், கடந்த திங்கட்கிழமை இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.


Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633


### Stock Market declines on thin volumes...

Daily Market Watch
10th May 2023

#### Market Commentary

The Stock Market closed on a negative note yesterday with the All Share Price Index shedding 0.25% to end the trading session at 8,892.37 while the S&P SL 20 Index declined by 0.61% to close at 2,588.63. Turnover remained low at LKR 415 mn with trading in Lanka IOC accounting for 41% of the total. Meanwhile, 6 Month and 12 Month T-Bill rates remained unchanged at yesterday's T-Bill auction whilst the 3 Month rate declined by 2 bps. With clarity on the debt restructuring expected soon, stock market activity is likely to gather momentum.


#### T Bill Auction Summary




#### Market Performance

| | 10.05.2023 | 09.05.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,892.4 | 8,914.7 | -0.25 |
| S&P SL 20 Index | 2,588.6 | 2,604.5 | -0.61 |
| Turnover (LKR mn) | 415.3 | 667.8 | -37.8 |
| Foreign Purchases (LKR mn) | 18.2 | 39.9 | -54.5 |
| Foreign Sales (LKR mn) | 1.6 | 10.4 | -84.6 |
| Market Cap (LKR bn) | 3,769.7 | 3,785.1 | -0.4 |
| Market Cap (US$ bn) | 11.9 | 11.9 | -0.4 |
| Traded Companies | 227 | 258 | -12.0 |
| Market PER (x) | 4.9 | 4.9 | -0.4 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | -1.1 |
| Dividend Yield (%) | 4.2 | 4.2 | 0.2 |


#### Relative Strength Index (RSI)




#### Contributors to ASPI





#### Turnover Breakdown




#### Key Rates

| | 10.05.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.84% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 23.14% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 35.50% |

#### Market Benchmarks




#### Largest Trades




#### Corporate News

CASH DIVIDENDS

Exterminators PLC (EXT) - LKR 0.40. XD date – 17.05.2023.

Union Chemicals Lanka PLC (UCAR) - LKR 17.00. XD date – 13.06.2023.

Malwatte Valley Plantation PLC (MAL) - LKR 0.16. XD date – 26.06.2023.

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date – 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 shares.

Colombo Investment Trust PLC (CIT) - 1 share for 83.2506410865 shares.

Colombo Fort Investment PLC (CFI) - 1 share for 48.6667476825 shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*


# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இடமாற்றம்

இந்துசமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு பம்பலப்பிட்டிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு 04, பம்பலப்பிட்டி, இல. 248 1/1 காலி வீதியில் இயங்கி வந்த இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், தற்போது இல.180, ரி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில் இயங்கி வருவதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

# முஸ்லிம் பூர்வீகப்புலத்தில் ஆழ்ந்த தெளிவிலிருந்தவர் அமரர் ஜெயராஜ்

## அமைச்சர் நசீர் அஹமட் அனுதாபம்



அரசியல் விமர்சகரும், ஆக்கபூர்வ எழுத்தாளருமான அனிஸ்டர் ஜெயராஜ் திடீரென மரணமடைந்துள்ள செய்தி கேட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருப்பதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர்அஹமட் அனுதாபம் தெரிவித்துள்ளார். அமைச்சரின் அனுதாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நண்பர் அனிஸ்டர் ஜெயராஜ் முஸ்லிம் அரசியல் குறித்து தெளிவான சிந்தனையில் இருந்தவர். தமிழர்களின் அரசியல் ஈடேற்றம் முஸ்லிம்களையும் அரவணைப்பதில்தானுள்ளது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து செயலாற்றியவர். மட்டுமல்ல, அவரது எழுத்துக்களிலும் இதை வலியுறுத்தியவர். ஆயுதப் போராட்டத்தின் திசை திரும்பலே, விடுதலைப்போராட்டத்தை சீரழித்ததாக் கருதியவர் அவர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரஃபுடன் அவருக்கிருந்த நெருக்கம், பல பரிமாணக் கற்கைகளை அவருக்குள் வளர்த்துவிட்டது. தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில், அஷ்ரஃபுடன் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் சிறுபான்மை சமூகங்களை ஒன்றிணைக்கவே! அஷ்ரஃபின் அந்த ஏழு நாட்கள்,தென்கிழக்கு அலகு மூன்று சமூகங்களினதும் முன்மாதிரிப் பூமி மற்றும் இன்னும் பல நூல்களை எழுதிய அமரர் அனிஸ்டர் ஜெயராஜ், முஸ்லிம் அரசியலுக்கு விசுவாசியாகச் செயற்பட்ட முன்மாதிரி மனிதர்.

தலைவர் அஷ்ரஃபின் மரணத்தின் பின்னர், என்னோடு நெருங்கிப் பழகியதில் அவரது குணாதிசயங்களை என்னால் கண்டு கொள்ள முடிந்தது. எனது அரசியல் வளர்ச்சியில் கனதியான பங்களிப்பை நல்கியதோடு இறுதி மூச்சி வரை என்னோடு இணைந்து பணியாற்றினார்.

கிழக்கின் பூர்வீகத்தில் (திருகோணமலை) பிறந்த அனிஸ்டர் ஜெயராஜ், சிறுபான்மை சமூகங்களின் ஒன்றுபடல் சிந்தனையிலேயே, கடைசி மூச்சையும் விட்டிருப்பாரெனத் தான் நம்புவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன்.

## டெங்கு நோய்ப்... (03 ஆம் பக்கத் தொடர்)

வட மத்திய மாகாணத்தில் இந்த வருடம் 364 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 1,481 டெங்கு நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 503 டெங்கு நோயாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 57 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதோடு மத்திய மாகாணத்தில் இந்த ஆண்டு பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2,401 ஆகும். டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 02 ஆக உள்ளது.

பதுளை மாவட்டத்தில் 445 டெங்கு நோயாளர்களும் மொனராகலை மாவட்டத்தில் 111 டெங்கு நோயாளர்களுமாக ஊவா மாகாணத்தில் 556 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இங்கு ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்தில் 1,878 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.இரத்தினபுரி மாவட்டத்தில் 708 டெங்கு நோயாளர்களும் ஒரு மரணமும் பதிவாகியுள்ளது. கேகாலை மாவட்டத்தில் 1,170 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இங்கு இறப்புகள் பதிவாகவில்லை.

இந்த வருடம் வடமேற்கு மாகாணத்தில் 3,458 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு குருநாகல் மாவட்டத்தில் 1,069 டெங்கு நோயாளர்களும் புத்தளம் மாவட்டத்தில் 2,389 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். வடமேல் மாகாணத்தில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆகும்.

இந்த வருடம் தென் மாகாணத்தில் 1,966 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்.... (03 ஆம் பக்கத் தொடர்)

கிளம்பின. அது பின்னர் சர்ச்சையாக மாறியதையடுத்து பத்து நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

நேற்றுக் காலை 10. 20 மணியளவில் 10 நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்த போதும் ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின்னர் மீண்டும் 12.05 மணிக்கே சபை நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

## பிரதான சந்தேக நபர்.... (03 ஆம் பக்கத் தொடர்)

சந்தேகநபர், நேற்று (10) களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்த சிறுமியின் கையடக்க தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், விடுதியின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்து சிறுமி தற்கொலை செய்து கொண்டதாக, சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக விசாரணைகளை முன்னெடுக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தன்னுடனிருந்த போது, அவருக்கு பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் அதன் பின்னரே, இந்த விபரீத முடிவை அவர் எடுத்ததாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சந்தேகநபரின் வாக்குமூலத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கீழ் மல்வத்து ஓயா.... (03 ஆம் பக்கத் தொடர்)

முடியும் என்றும் அவர் தெரிவித்தார். கீழ் மல்வத்து ஓயா திட்டத்தை நிறைவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் அதன் மூலம் ஈட்டிக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த Sinomach நிறுவனத்தின் தலைமை பிரதிநிதி அலெக்ஸ் குவோ, 160 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் இத் திட்டத்திற்காக சீன வங்கிகளிலிருந்து நிதியை திரட்டும் நடவடிக்கையை China CAMC நிறுவனத்தினால் பொறுப்பேற்க முடியும். முதல் கட்டத்தில் யான் ஓயா நீரத்தேக்கத்தில் மிதக்கும் சூரிய சக்தி மின் தகடுகளை வைப்பதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தினை தேசிய மின் கட்டமைப்புக்கு விற்பனை செய்ய முடியும்.

கீழ் மல்வத்து ஓய திட்டத்திற்குத் தேவையான கடன் தொகையின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை யான் ஓயா மீது அமைக்க திட்டமிடப்பட்டுள்ள சூரிய மின் சக்தி திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக ஈட்டக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்றும் எலக்ஸ் குவோ குறிப்பிட்டார்.

கீழ் மல்வத்து ஓய திட்டத்தின் முதலாவது மீளாய்வு மற்றும் சாத்திய வள ஆய்வு ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது, நீர்ப்பாசன பிரதி அமைச்சராக, தாம் இருந்ததாகவும் இதில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். இது வரையில் அது தொடர்பில் எவ்வித முன்னேற்றங்களையும் காண முடியவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

## எலிக்காய்ச்சல் பரவல்...

முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சங்கத்தின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் சமூகநல வைத்திய அதிகாரி குஷானி தாபரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். சிறுபோகம், ஆரம்பமாகும் மார்ச் முதல் மே மாதம் வரையான காலப் பகுதியிலும், பெரும்போகத்தின் செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியிலும், எலிக் காய்ச்சலின் தாக்கம் அதிகரிக்கிறது. எனவே, இக்காலப்பகுதியில், விவசாயிகளுக்கு, இது தொடர்பில் தெளிவுபடுத்தி, நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுப்பது அவசியம். மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம், எலிக்காய்ச்சல் பரவலிலிருந்து, பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென வைத்தியர் குஷானி தாபரேரா குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள் ஆட்டோக்களை ...

முச்சக்கர வண்டிகள், மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றப்படவுள்ளதாக ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஜனாதிபதியின் திட்டங்களை வரவேற்கிறேன்

## எமது பூரண ஆதரவு ஜனாதிபதி ரணிலுக்கே

### SLFP யின் கம்பஹா மாநகர சபை முன்னாள் உறுப்பினர்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

வரலாற்றில் எமது நாடு முகங் கொடுத்த பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மீண்டும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான சிறந்த திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகின்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நாம் பூரணமான ஆதரவு வழங்குவோம் என கம்பஹா மாநகர சபையின் முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பிரேமசிறி காரியவசம் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

பொருளாதார நெருக்கடிமிக்க கடந்த காலத்தில் பொதுமக்கள் பாரிய துயரங்களை அனுபவித்தனர். அதனை யாராலும் மறுக்க முடியாது.

எனினும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட்டெடுத்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையே சாரும். இதனாலேயே ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதற்கு நான் எனது பிரதேச ஆதரவாளர்களுடன் இணைந்துள்ளேன்.

சுமார் 20 வருடங்களாக கம்பஹா மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக நான் பதவி வகித்துள்ளேன். எனினும் தற்போது நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிமிக்க காலத்தில் ஜனாதிபதியின் தலைமையிலேயே நாட்டை மீட்டெடுத்து மீண்டும் நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தற்போது மக்கள் மத்தியில் உள்ளது.

இதற்கு நான் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அவருக்கு ஆதரவு வழங்குகிறேன்.

கம்பஹா பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களும் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்பட வேண்டும். இதனையே நான் விரும்புகிறேன் என்று கூறினார்.

# முஸ்லிம் சேவை 'பாரம்பரியம் நிகழ்ச்சியில்' சம்மாங்கோட்டு பள்ளி அபுல் ஹஸன் (காஹிரி)





எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய் கிழமை இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்தோர் வரிசையில் புறக்கோட்டை சம்மாங்கோட்டு பள்ளியின் முன்னாள் கதீப், பேஷ் இமாம் காலஞ்சென்ற மௌலவி அல்ஹாஜ் எம்.கே.ஈ.அபுல் ஹஸன் (காஹிரி) அவர்களின் நினைவுகள் பரிமாறப்பட இருக்கிறன.

இவர், 1960 தொட்டு நீண்ட காலமாக இஸ்லாமிய நற்சிந்தனை, குர்ஆன் விளக்கம், விசேட உரைகள், பிரார்த்தனைகள் போன்ற இன்னோரன்ன சன்மார்க்க நிகழ்ச்சிகளை வழங்கி வானொலி நேயர்கள் மத்தியில் பெரும் பிரபலம் பெற்ற ஒரு சன்மார்க்க அறிஞராவார்.

இவரது நினைவுகளை இவரோடு மிக நெருக்கமாக பழகியவர்களான புறக்கோட்டை சம்மாங்கோட்டு பள்ளி, கதீப், பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் எஸ். ஓ. எம். காழி அலாவுதீன் சித்தீக்கி (பாஸில் பாகவி), தமிழ்த்தென்றல் அலி அக்பர் ஆகியோர் நினைவு கூருவர்.

இந்நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# தப்புலவை கைதுசெய்வதற்கு எதிரான இடைக்கால தடை மேலும் நீடிப்பு



முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்வதை தடுக்கும் வகையில் விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் தாக்கல் செய்த நீதிப்பேராவை மனு (05) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் எம்.ஏ.ஆர். மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் தாம் வழங்கிய வாக்குமூலம் குறித்து விசாரணை செய்வதற்கும் வாக்குமூலம் பதிவு செய்வதற்கும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு தன்னை அழைத்துள்ளதாக மனுதாரரான முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

தாம் சட்டமா அதிபராக கடமையாற்றியபோது மேற்கொள்ளப்பட்ட செயலை பொலிஸ் துறையினர் விசாரிக்க முடியாது எனவும், அவ்வாறு செய்தால் சட்டமா அதிபரின் சிறப்புரிமை மீறப்படும் எனவும் முன்னாள் சட்டமா அதிபர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

எனவே, தன்னை கைது செய்து விசாரணை நடத்துவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரதிவாதிகளுடன் கலந்தாலோசிப்பது அவசியம் எனவும் அதற்கு சுமார் ஒரு மாத கால அவகாசம் தேவை எனவும் நீதிமன்றில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் பரிந்த ரணசிங்க தெரிவித்தார்.

மனுதாரர் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்காததால், மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கோரிக்கையை ஏற்று, மனுவை ஜூன் 22 ஆம் திகதிக்கு நீதியரசர்கள் குழாம் ஒத்திவைத்தது.

# உள் வீதிகளிலும் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும்

### காரைதீவு பொலிஸ் பொறுப்பு அதிகாரி

**காரைதீவு குறூப் நிருபர்**

உள்ளூர் வீதிகளிலும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். இது உங்கள் உயிரை மட்டுமல்ல குடும்பத்தையும் பாதுகாக்கும்.

இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என காரைதீவு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எஸ். ஜெகத் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச பொலிஸ் ஆலோசனை சபையின் குழுக்கூட்டம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது .

அதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தி வந்தால் தயவுதாட்சண்யமின்றி அவர்களையும், வாகனத்தையும் நீதிமன்றத்துக்கு அனுப்ப நேரிடும். அதிர்ஷ்டவசமாக காரைதீவு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை மிகவும் அரிதாக இருக்கின்றது.

போதைப் பொருளை ஊருக்குள் நுழைய விட்டால் எமது எதிர்காலமே சூனியமாகும். எனவே போதை பொருள் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக எங்களுக்கு அறிவிக்க வேண்டும்என்றார்.

# பலாங்கொடையில் குடும்பஸ்தரைக் காணவில்லை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை சமனலவத்தைப் பகுதியில் 45 வயதான நபரொருவர் காணாமல் போயுள்ளார். இவர் கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக இவரது சகோதரர் ஒருவர் பலாங்கொடைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டிலிருந்து வெளியில் சென்றிருந்த போது காணாமல் போயுள்ளதாக இவரது தந்தை வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது தொலைபேசிக்கு இறுதியாக கிடைத்த அழைப்பு குறித்தும் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை நான்கு வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தைச் சேர்ந்த தரம் ஐந்து புலமைப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த சிறுவன் ஒருவன் காணாமல் போனமை தொடர்பில் இதுவரை தகவல் கிடைக்கவில்லை. இச்சிறுவன் இப்பிரதேசத்தை அண்மித்த காட்டுப்பகுதியில் நடமாடும் சிறுத்தைகளுக்கு இரையாகி இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கைகளுக்கு மோப்ப நாய்களின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 2017 முதல் 2022 வரை;

# அநுராதபுரம் மாவட்டத்தில் 4500 சிறுநீரக நோயாளர்கள் உயிரிழப்பு

### டெங்கு, எலிக்காய்ச்சல் நோய்களின் பரவல் அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் டெங்கு, எலிக்காய்ச்சல் போன்ற நோய்களின் பரவல் அதிகரித்துள்ளதாகவும் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 4500 சிறுநீரக நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் பாலித பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் அநுராதபுரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 209 ஆக பதிவாகியுள்ளது. பெரும்பாலான நோயாளிகள் நகர் பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ளதோடு இவ் ஆண்டு 90 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 4500 சிறுநீரக நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுநீரக நோயைத் தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட "மெத்சிறி செவனவை" அந்த நோயாளர்களுக்காக பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் டாக்டர் பாலித பண்டார இதன் போது வலியுறுத்தினார்.

# வெசாக் தினத்தில்; இன நல்லிணக்க அன்னதான நிகழ்வு



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

வெசாக் தினத்தை முன்னிட்டு இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனம் பொரளை போதி விஹாரையில் விகாராதிபதி அத்துல அனுநாயக்கவுடன் இணைந்து அன்னதான நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனத் தலைவர் றிஸான் குஸைன், புலஸ் லேன் மஸ்ஜித் நம்பிக்கையாளர் பிர்தௌஸ் மௌலவி, பொரளை இந்து ஆலயத்தின் பிரதான குருக்கள் விநாயகர் குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சுமார் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதன்போது குறித்த விஹாரைக்கு கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனமும் அவுஸ்ரேலிய நலன்புரி அமைப்பும் இணைந்து சிறு நிதி உதவியையும் பிரதான விகாராதிபதி அத்துல அனுநாயக்கவிடம் வழங்கினர். இதன்போது விகாராதிபதி தனது நன்றிகளையும் தெரிவித்தார்.



கந்தரை அல் அஸ்ஹர் அஹதியா பாடசாலையின் தரம் 01 இற்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) அல் அஸ்ஹர் பாடசாலையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் மாத்தறை மாவட்ட பிரதிநிதி ஹனூன் கலந்து சிறப்பித்தார். இவ்விழாவில் ரமலான் மாத போட்டி நிகழ்ச்சிகளுக்கான பரிசில்களும், கடந்த வருட கல்வியாண்டில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# தேங்காய் விலை சடுதியாக அதிகரிப்பு

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர் பிரதேசங்களில் சடுதியாக தேங்காய் விலை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபாய் முதல் 160 ரூபாவிற்கும் அதிக விலையில் விற்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நாளுக்கு நாள் தேங்காயின் விலை அதிகரித்துச் செல்வதோடு தேங்காயிற்கான தட்டுப்பாடும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதிக விலையில் கொள்வனவு செய்தாலும் தரமற்ற தேங்காய்களாக காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் வீடுகள் உடைத்து கொள்ளை

### 14 வயது சிறுவன் உட்பட இருவர் கைது

**மட்டக்களப்புகுறூப்நிருபர்**

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுகளிலுள்ள பிரதேசத்தில் பூட்டியிருந்த 6 வீடுகளை உடைத்து அங்கிருந்து பணம், தங்க நகைகள், மடிகனிணி மற்றும் மின் உபகரணங்களை திருடிவந்த 14 வயது சிறுவன் உட்பட இருவரையும், திருட்டு பொருட்களை வாங்கிய 4 பேருமாக மொத்தம் 6 பேரை கைது செய்துள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர்.

மட்டு.கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதிவரை அந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக பூட்டியிருந்த 4 வீடுகளின் கூரை மற்றும் யன்னல் கதவுகளை உடைத்து அங்கிருந்த 4 மடிகளணிகள் ,கையடக்க தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான மின்சார உபகரணங்கள் திருட்டுபோயுள்ளன .

இது தொடர்பாக கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான திங்கட்கிழமை குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் கொக்குவில் பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவன் மற்றும் 25 வயதுடைய ஆண் ஒருவர் உட்பட இருவரை கைது செய்தனர்.

# நிக்கவெரட்டிய சில்லறை கடையில் தீ விபத்து

நிக்கவெரட்டிய பொலிஸ் பிரிவில் குருநாகல் வீதியில் அமைந்துள்ள சில்லறைக் கடையொன்றில் நேற்று முன்தினம் (09) மாலை திடீரென தீப்பிடித்ததில் அக்கடையிலிருந்த பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

எனினும், இத் தீ விபத்தினால் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடையில் பரவிய தீயை, நிக்கவெரட்டிய பொலிஸாரும் குருநாகல் தீயணைப்புப் பிரிவினரும் அப்பிரதேசவாசிகளும் இணைந்து கட்டுப்படுத்தியுள்ளனர். இத்தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர். இத்தீ விபத்து தொடர்பாக நிக்கவெரட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரியாவில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இலங்கை ஊடகவியலாளர் கௌரவிப்பு

**ருசைக் பாரூக்**

கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்ற உலக ஊடகவியலாளர் மாநாட்டில் கொழும்பு டைம்ஸின் ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் விசேடமாக அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டார். கொரியாவில் அதன் தலைவர் டோங் ஹூன்கிம் தலைமையில் பத்திரிகையாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்த ஒருவார கால மாநாட்டில் 48 நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

பிரியாவிடை விருந்துபசாரம் இன்சியான் நகர மேயர் யோ ஜியோங் போக் அவர்களால் நடத்தப்பட்டது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சவூதியில் அரபு செய்திகளுடன் இணைந்திருந்த இலங்கையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் ரசூல்தீன், இன்சியான் நகரத் தந்தையினால் வழங்கப்பட்ட பிரியாவிடை விருந்தில் கௌரவிக்கப்பட்ட ஒரே ஊடகவியலாளர் ஆவார்.





கொரியாவுக்கான நுழைவாயிலாக, இன்சியான் துறைமுகம் மற்றும் இன்சியான் சர்வதேச விமான நிலையம் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளதால், இன்சியான் உலகிற்கு திறந்திருக்கும் நகரமாகும். பரந்த சமவெளிகள் மற்றும் மலைகள், கடல் மற்றும் ஏராளமான பெரிய மற்றும் சிறிய தீவுகள் உட்பட 3 மில்லியன் மக்கள் தொகைகொண்ட உலகத்தரம்வாய்ந்த நகரமாக இது வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 20

**குறள் தரும் சிந்தனை**

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை

போர்க்களத்தில் கீழே தள்ளி விட்டுத் தப்பித்து ஓடிப்போகும் குதிரையைப் போன்றவர்களின் நட்பைப் பெறுவதைக் காட்டிலும் தனித்து இருப்பது எவ்வளவோ சிறப்புடையதாகும்.

# நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது தொழிற்சங்கங்களின் பொறுப்பு

இலங்கையில் பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குவதில் பஸ் மற்றும் ரயில்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அதிலும் ரயில் போக்குவரத்து சேவை என்பது மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியதாக விளங்குகிறது. இதன் ஊடாக குறிப்பிடத்தக்க மக்கள் தினமும் பயனடைந்து வருகின்றனர்.

மக்களுக்கு சேவை அளிப்பதைப் பிரதான நோக்காகக் கொண்டுள்ள ரயில் சேவையின் மூலம் நஷ்டங்கள் ஏற்படுகின்ற போதிலும் அதனை அரசே பொறுப்பேற்றுக்கொள்ளும் நடைமுறைதான் காணப்படுகின்றன.

இந்நிலையில், மக்களுக்கு சேவை வழங்கும் இச்சேவையை நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் வெகுஜன ஊடக மற்றும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்ன விஷேட கவனம் செலுத்தியுள்ளார்.

நாடு கடந்த வருடத்தின் முற்பகுதியில் முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடி நாட்டின் அனைத்து துறைகளிலும் பாதிப்புக்களையும் நெருக்கடிக்களையும் ஏற்படுத்தியது.

என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் ஊடாக பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்த நிலையில் பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்துள்ளது. ஆனாலும் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அழுத்தங்களும் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில், சில தொழிற்சங்கங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து எவ்வித கவனமும் செலுத்தாது செயற்பட்டு வருகின்றன. பொருளதாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாடு இப்போது தான் கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை அளிக்கும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகப் பங்களிக்க வேண்டிய பொறுப்பு தொழிற்சங்கங்களுக்கும் உள்ளது.

இருந்த போதிலும் சில தொழிற்சங்கங்கள் நாட்டினதோ மக்களினதோ நலன்கள் குறித்து கவனம் செலுத்தாது எடுத்ததற்கெல்லாம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடியனவாக உள்ளன. இது அத்தொழிற்சங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடே அன்றி வேறில்லை என்பது தான் மக்களின் கருத்தாகும்.

பொதுவாக எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதில்லை. அதனால் தொழிற்சங்க நடவடிக்கைக்காக முன்வைக்கும் கோரிக்கை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளையும் கலந்துரையாடல்களையும் உரிய ஒழுங்கில் நடாத்தும் போது தொழிற்சங்க நடவடிக்கையின்றியே பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதேநேரம் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டாலும் அவற்றால் நாட்டுக்கும் மக்களுக்கும் நஷ்டமும் இழப்புக்களும் தான் ஏற்படும்.

அந்த வகையில் ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த சில தொழிற்சங்கங்கள் அண்மையில் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையினால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ரயில்வே திணைக்களத்துக்கு ஏற்பட்டது. இது உறுதிப்படுத்தப்பட்ட நஷ்டமாகும்.

இவ்வாறான நிலையில் ரயில் நிலைய அதிபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் திடீரென அடையாள வேலைநிறுத்தமொன்றை முன்னெடுத்தனர். இவ்வேலைநிறுத்தத்தின் நிமித்தம் முன்வைத்த கோரிக்கைகளில் ரயில்வே திணைக்களத்தின் 'வணிக பிரதி முகாமையாளராக சந்திரசேன பண்டார என்பவரை நியமிக்க வேண்டாம்' என்பதும் ஒன்றாகும்.

எந்தவொரு அரச நிறுவனத்திலும் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதும், எந்தப் பதவிக்கு எவரை நியமிக்க வேண்டும் என்பதையும் அரசே முடிவு செய்யும். அந்நியமனங்களில் தொழிற்சங்கங்கள் தலையீடு செய்யவும் முடியாது. அந்நியமனங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் முறையானதல்ல.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் நேற்று முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையால் ரயில்வே திணைக்களம் பல இலட்சம் ரூபா நஷ்டத்திற்கு முகம் கொடுத்துள்ளது. குறிப்பாக நேற்று அதிகாலை முதல் எந்தவொரு ரயில் நிலையத்திலும் ரயில் டிக்கட்டுகள் வழங்கப்படவில்லை. பயணிகள் கட்டணம் செலுத்தாது பயணிக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அத்தோடு தங்களது நாளாந்த பணிகளையும் ரயில் நிலைய அதிபர்கள் புறக்கணித்தமையும் ரயில்வே திணைக்களத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் நாட்டில் இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் நெருக்கடிகளை அதிகரிக்கவே செய்யும்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது தொழிற்சங்கங்களின் பொறுப்பாகும். இல்லாவிடில் ஒவ்வொரு தொழிற்சங்க நடவடிக்கையும் நாட்டுக்கும் மக்களுக்கும் நஷ்டங்களையும் இழப்புக்களையுமே ஏற்படுத்தும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது.

editor.tkn@lakehouse.lk

# உடல் பருமனால் புற்றுநோய் ஏற்படுமா?



இன்று உலகை அச்சுறுத்தும் முக்கிய நோயாக இன்று விஸ்வரூபம் எடுத்திருக்கிறது புற்றுநோய். இந்தியா போன்ற நாடுகளில் இதன் தாக்கம் மிகவும் அதிகமாகும். அடிப்படை வசதிகள் கூட இல்லாத கிராமங்களில் கூட இந்நோய் ஆழமாக ஊடுருவிவிட்டது.

நல்ல வசதி, வாய்ப்பு இருப்பவர்கள் ஆரம்பத்திலேயே இந்நோயை கண்டறிந்து சரியான சிகிச்சை பெற்று முழுமையாக குணமடைந்து விடுகின்றனர். ஆனால், வசதி, வாய்ப்பில்லாத பலர் இறுதிக் கட்டத்தில் நோயை கண்டறிந்து மரணத்தைத் தழுவுகின்றனர். இந்நிலையில், 'புகைப்பிடித்தலை விட உடல் பருமன்தான் புற்று நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணியாக இருக்கிறது' என்று சமீபத்திய ஆய்வொன்று அதிர்ச்சி தகவலை வெளியிட்டிருக்கிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ நிறுவனமொன்று பல ஆண்டுகளாக புற்றுநோய் குறித்து ஆய்வு செய்து இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு பால் புட்டியால் குழந்தைகளுக்குப் புற்றுநோய் ஏற்படுகிறது என்ற அதிர்ச்சித் தகவலை உலகுக்குத் தெரிவித்ததும் இந்த நிறுவனம்தான்.

குடல், சிறுநீரகம், ஈரல், கருப்பை புற்றுநோய் உட்பட 13 வகையான புற்றுநோய்களுக்கு முக்கிய காரணியாக இருப்பது உடல் பருமன் தான் என்று உறுதிபடக் குறிப்பிட்டிருக்கிறது இந் நிறுவனம். இந்த வகையில் உலகம் முழுவதும் உடல் பருமன் காரணமாக பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'புகைப்பிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும்' என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ள அளவுக்கு 'உடல் பருமனும் புற்றுநோயை உண்டாக்கும்' என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாதுள்ளன என அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. என்றாலும் உடல் பருமன் உடைய எல்லோருக்கும் புற்றுநோய் ஏற்படாது. ஆனாலும் உடல் பருமன் அதிகரிக்கும்போது அது தொடர்பில் மருத்துவ ஆலோசனையுடன் புற்றுநோய்க்கான பரிசோதனை செய்துகொள்வது நல்லது என்பது மருத்துவர்களின் அபிப்பிராயமாகும்.

# லங்கா ஐ.ஓ.சி உடன் இணைந்து எரிபொருள் விற்பனையில் காகில்ஸ்

கிட்டத்தட்ட நான்கு தசாப்த காலமாக சுப்பர் மார்க்கட் வணிகத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி தனது விற்பனையகங்களில் லங்கா ஐ.ஒ.சி எரிபொருள் நிலையங்களைத் திறந்து வைப்பதன் ஊடாக தனது மகத்தான பயணத்தில் புதியதொரு மைல்கல்லை பதிவு செய்கிறது. வாடிக்கையாளர்களுக்கு நிகரற்ற சௌகரியத்தைப் பெற்றுத்தரும் இத்திட்டத்தின் முதலாவது லங்கா ஐ.ஒ.சி எரிபொருள் நிலையம் வத்தளை காகில்ஸ் புட்சிட்டியில் கடந்த 03ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.



வத்தளை விற்பனை நிலையத்திலுள்ள எரிபொருள் நிலையத்தின் வைபவ ரீதியான திறந்து வைப்பானது, லங்கா ஐ.ஒ.சி முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட பிரதித் தலைவர் (விற்பனை மற்றும் மனித வளம்), அவர்களோடு காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி இனது பிரதித் தலைவர், குழும முகாமைத்துவப் பணிப்பாளர், வாடிக்கையாளர் விற்பனை முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் காகில்ஸ் குழும அங்கத்தவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த காகில்ஸ் (சிலோன்) பிஎல்சி இனது பிரதித் தலைவர் ரஞ்சித் பேஜ், 'வாடிக்கையாளர்களுக்கு முழுமையான கொள்வனவு அனுபவத்தைப் பெற்றுத் தருவதற்காக வத்தளை காகில்ஸ் புட்சிட்டியில் முதலாவது லங்கா ஐ.ஒ.சி எரிபொருள் நிலையம் திறந்து வைக்கப்படுகிறது. இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதன் அநேகமான எரிபொருள் நிலையங்களில் காகில்ஸ் எக்ஸ்பிரஸ் விற்பனை நிலையங்கள் அமைந்திருப்பதோடு லங்கா ஐ.ஒ.சி உடன் நாம் நீண்ட நாள் உறவினைக் கொண்டுள்ளோம். லங்கா ஐ.ஒ.சி உடன் இணைந்து எரிபொருள் விற்பனையில் பிரவேசிப்பதன் ஊடாக எமது உறவை மேலும் வலுப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

2023 இல் நாடெங்குமுள்ள எமது காகில்ஸ் விற்பனை நிலையங்களில் எரிபொருள் நிலையங்களின் தொடர் ஒன்றைத் திறப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். இதன் ஊடாக சுப்பர் மார்க்கட் வலையமைப்பு ஒன்றுக்கு அப்பாற்பட்ட சேவையை வழங்கி பாவனையாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்' என்றுள்ளார்.

எரிபொருள் விற்பனை துறைக்கான இவ்விரிவாக்கமானது, நாள் தோறும் மில்லியன் கணக்கிலான இலங்கையர்களின் வாழ்வோடு இணைந்த நிலைபேறான, சமூகப் பொறுப்புணர்வு மிக்க வணிகமொன்றைக் கட்டியெழுப்பி வரும் காகில்ஸின் 179 ஆண்டு கால வரலாற்றில் மற்றொரு மைல்கல்லாகும். இலங்கையருக்கு சுப்பர் மார்க்கட் அனுபவத்தை காகில்ஸ் அறிமுகம் செய்தது. நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சேவையளிக்கும் ஒரேயொரு தனியார் உணவுப் பொருட்கள் விற்பனையாளராகவும் காகில்ஸ் உள்ளது. இன்று, காகில்ஸ் வாடிக்கையாளர் விற்பனை பிரிவானது இலங்கை முழுவதும் 500 க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளது.

# பண்டாரவளையில் திண்மக்கழிவுப் பொருட்களால் மக்கள் முகம் கொடுத்துள்ள அசௌகரியங்கள்

பண்டாரவளை மாநகரில் தினமும் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுப் பொருட்கள் லியோ மார்கா ஆசிரமத்தை அண்மித்த சுற்றாடலில் கொட்டப்படுகிறது. அவை மீள் சுழற்சிக்கும் உட்படுத்தப்படுகிறது. ஆனால் மீள்சுழற்சி கொள்ளளவை விடவும் அதிகளவில் திண்மக்கழிவுப்பொருடகள் தினமும் இங்கு சேருகின்றன. இதன் விளைவாக இங்கு திண்மக்கழிவுப் பொருட்கள் மலைபோன்று குவிந்துள்ளதோடு பிரதேசம் முழுவதும் துர்நாற்றமும் வீசுகிறது. அத்தோடு கட்டாக்காலி நாய்களது தொல்லையும் இப்பகுதியில் அதிகரித்துள்ளன. இந்நிலைமையை இட்டு பிரதேசவாசிகள் கவலையும் விசனமும் தெரிவித்துள்ளனர்.



பெருந்தோட்ட வாழ் மலையக மக்களுக்காக வணக்கத்துக்குரிய அருட்தந்தை கீத பொன்கலன் அவர்கள் கட்டியெழுப்பிய லியோ மார்கா ஆசிரமம் பண்டாரவளை, சென் தோமஸ் வீதியில் அமைந்துள்ளது.

இங்கு திண்மக் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் உருவாகியுள்ள நிலைமை குறித்து பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், இம் மாநகரில் தினமும் தொன் கணக்கில் சேகரிக்கப்படும் குப்பை கூள

ங்கள் இந்த ஆசிரமத்துக்கு அண்மித்த பகுதியில் தினமும் கொட்டப்படுகின்றன. அதன் விளைவாக இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த வண்ணமுள்ளனர்.

இங்கு சுத்தமான குடிநீர் கிணறொன்று காணப்படுகிறது. அதனுள் இக்கழிவுப்பொருட்களின் திரவங்கள் கசிந்து நீரில் கலப்பதாகக் குறிப்பிடுகின்ற பிரதேசவாசிகள், காகங்களாலும் இக்கிணறு அசுத்தமடைவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பிரதேச பாதைகள் பழுதடைந்துள்ள போதிலும் தினமும் குப்பைகளை ஏற்றிச்செல்லும் ட்ரக்டர்கள், லொறிகள், பவுசர்கள் வந்து செல்கின்றன. இங்கு குப்பைகள் பெரு மலை போன்று சரிந்து சிதறிக் காணப்படுவதோடு பிரதேசமெங்கும் துர்நாற்றமும் பரவியுள்ளது. சுகாதாரத்துக்கும் கேடு விளைவிப்பதற்கு துணைபுரியக்கூடிய வகையில் இவை காணப்படுகின்றன.

குப்பை மேடு மலைபோன்று வளர்ச்சி பெற்றுவரும் நிலையில் பிரதேசத்தில் வசித்து வந்த ஓரிரு குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, அவ்விடத்திலும் குப்பை கொட்டப்படுகின்றன. இந்நிலைமை குறித்து அரசியல்வாதிகளுக்கு அறிவித்தும் எந்தப் பலனும் கிட்டவில்லை எனவும் பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலைமை பிரதேசத்தில் நோய்கள் பரவும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன.

சமாதான நகரம், தூய காற்று, உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரி என மார்தட்டிக்கொள்ளும் நாம், இக்குப்பை மேட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண மாற்று வழியை அடையாளம் காண வேண்டும். பண்டாரவளை, எல்ல, அப்புத்தளை போன்ற பகுதிகள் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகளை அதிகளவில் கவர்ந்திழுக்கக்கூடிய இடங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. பல உல்லாச ஹோட்டல்கள், தரமான பாடசாலைகள் என்பன இப்பிரதேசத்தில் அமைந்துள்ளன.

அதனால் இப்பிரதேசத்தின் தூய்மையையும் பசுமையையும் பேண வேண்டிய பொறுப்பு பிரதேசத்திற்கு பொறுப்பான உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ளது என்பது தான் பிரதேசவாசிகளின் கருத்தாகும்.


லியோ மார்கா ஆசிரமத்துக்கு வருகை தருபவர்கள் கூட இத்திண்மக்கழிவு மேட்டை கடந்து முகத்தை சுழித்தபடி சென்று வரவேண்டிய துர்பாக்கிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆகவே பிரதேசத்தின் நிலைமையைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு தீங்குகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். திண்மக்கழிவுகளை அப்புறப்படுத்தவென அதற்கு பொறுத்தமான மாற்று இடமொன்று தெரிவு செய்து கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை, சூழல் பாதுகாப்பு இயக்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன விஷேட கவனம் செலுத்த வேண்டும். அவையே இப் பிரதேசவாசிகளின் பிரதான கோரிக்கையாக உள்ளன.

**எம்.ஏ.எம்.ஹஸனார்...**
*(ஊவா சுழற்சி நிருபர்)*

# ஈரானின் ஷிராஸ்: கைப்பணி பொருட்களுக்கான உலகளாவிய நகரம்

வரலாறு, பாரம்பரியம், கலாசார முக்கியத்துவம், உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் தனித்துவமான அழகு என்பன காரணமாக வருடாவருடம் மே 5 ஆம் திகதி தேசிய ஷிராஸ் தினமாக கொண்டாடப்படுகிறது. ஈரானின் தென் மத்தியில் அமைந்துள்ள இந்நகரை யுனெஸ்கோ நிறுவனம் கைவினைப்பொருட்களுக்கான உலக நகரம் என 2020 ஆண்டில் பிரகடனப்படுத்தியது.



ஷிராஸுக்குரிய மரத்தாலான கைவினைப் பொருட்கள், ஏனைய கைவினைப் பொருட்களையும் விட மிகவும் பிரபல்யமானவை, மட்பாண்டங்கள், மொசாயிக் பையான்சு(அலங்கார மட்பாத்திரம்), பீங்கான் கைவினைப் பொருட்கள், வெள்ளி வேலைப்பாடுகள் மற்றும் சேஸிங் போன்ற உலோக வேலைப்பாடுகள், கையால் நெய்த பொருட்கள் மற்றும் பாய் நெசவு, பாரம்பரிய கண்ணாடி பொருட்கள், மற்றும் சிற்றோவியம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு தான் யுனெஸ்கோ நிறுவனம் இந்த உலகளாவிய அந்தஸ்தை ஷீராஸ் நகருக்கு வழங்கியுள்ளது. அத்தோடு ஈரானின் மேலும் மூன்று நகரங்களும் கிராமங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. என்றாலும் ஷீராஸானது பல்வேறு துறைகளிலும் பாரம்பரியங்களிலும் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் உலகப் புகழ்பெற்ற பாரசீக மகா கவிகளான சஅதி மற்றும் ஹாபிஸின் நகரமாகவும் விளங்குகிறது ஷீராஸ்.

கவிஞர் சஅதியின் கல்லறை தெற்கு ஷிராஸில் அமைந்துள்ளது. இது ஈரானின் முக்கிய சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். இக்கல்லறை முதன்முதலில் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இருப்பினும், 17 ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டது. எனினும் இன்றைய கட்டிடம் 1950 களில் கட்டப்படும் வரை அது சிதைந்த நிலையிலேயே காணப்பட்டது. பல பாரசீக கூறுகள் அதன் கட்டிடக்கலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தேசிய பாரம்பரிய தளமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதேநேரம் மகாகவி சஅதியை நினைவு கூறவென உலகெங்கிலும் இருந்து ஏராளமான இலக்கியவாதிகளும் அறிஞர்களும் வருடாவருடம் ஏப்ரல் 20 ஆம் திகதி இவ்விடத்தில் கூடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

மற்றொரு பாரசீக கவிஞராக விளங்கும் ஹாபிஸின் கல்லறை ஷிராஸின் வடக்கு விளிம்பில் அமையப்பெற்றுள்ளன. இவரது நினைவாக கல்லறை அடங்கலாக இரண்டு கட்டிடங்கள் இங்கு எழுப்பப்பட்டுள்ளன. அத்தோடு புகழ்மிக்க நபர்களின் நினைவுச்சின்னங்களையும் இந்நகர் கொண்டுள்ளன.

ஈரானில் கவிஞர்கள் பிறந்த மண் எனவும், இலக்கியம், மலர் தோட்ட நகரம் என்றும் கூட ஷீராஸ் அழைக்கப்படுகிறது. அத்தோடு காதல் இலக்கியத்தின் நகரமாகவும் அது கருதப்படுகிறது.

பிரபல்யமான பல ஈரானிய கவிஞர்களும் தத்துவஞானிகளும் ஷிராஸில் பிறந்துள்ளனர். ஷிராஸை பிரபல்யமாக்குவதில் அவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர், இதில் சாஅதி, ஹஃபீஸ் மற்றும் முல்லா சத்ரா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

13 ஆம் நூற்றாண்டில், விஞ்ஞானம், கலாசாரம் மற்றும் கலையின் செழிப்பு காரணமாக ஷிராஸ் அறிவியல் நகரம் (தார்அல் இல்ம்) என்று அறியப்பட்டது.

அதேநேரம் ஷீராஸானது வரலாறு மற்றும் கலாசாரத்தில் ஒரு சிறந்த பின்னணியைக் கொண்டுள்ளதன் காரணமாக ஈரானியர்களிடையே ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இப்பின்புலத்தில் கவிஞர்களின் இலக்கிய நகரம், பூக்களின் நகரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது இந்நகர். ஈரானின் வரலாற்று பெருமை மிக்க நகரங்களில் ஒன்றாகவும் ஷீராஸ் விளங்குகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்கு விருந்தளிக்கும் பல பூங்காக்களும் வரலாற்று நினைவுச்சின்னங்களும் இங்குள்ளன.

தேசிய ஷிராஸ் தினத்தையொட்டி, ஷிராஸ் நகராட்சியால் வருடாவருடம் இத்தினத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இத்தினத்தில் சில உள்ளூர் இசைக்கலைஞர்கள் இசை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற பாடல்களைப் பாடுவர். கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் சிறப்பு ஆடைகளை அணிந்து பார்வையாளர்களுக்கு பாரம்பரிய உணவுககளை வழங்குவர்.

ஷிராஸானது, ஈரானின் தென்மேற்கில் ஜாக்ரோஸ் மலைப்பகுதியில் அமைந்துள்ளது, இம்மலைத்தொடர் ஷிராஸின் மூலோபாய இருப்பிடத்திற்கு மிகவும் முக்கியமான பாதுகாப்பாகும்.

கி.பி 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கு முன்னர் அதன் இருப்பு பற்றிய உறுதியான பதிவு எதுவும் இல்லை, ஆனால் 1933 மற்றும் அதற்கு பிறகு நடத்தப்பட்ட அகழ்வாய்வின் போது சில தொல்பொருள் கண்டுபிடிப்புகள், ஷிராஸில் கி.மு 6 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் மக்கள் குடியேறியிருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

நவீன நகரம் கி.பி. 693 இல் உமையா ஆட்சி காலத்தில் நிறுவப்பட்டது அல்லது மீட்டெடுக்கப்பட்டது. 9, 10, 11 ஆகிய நூற்றாண்டுகளில் முறையே ஈரானிய ஸபாவித் மற்றும் புயீத் வம்சங்களின் கீழ் முக்கியத்துவம் பெற்ற நகரமாகத் திகழ்ந்தது. 1750 முதல் 1800 வரை ஸாண்ட் வம்ச ஆட்சியின் போது இது பாரசீகத்தின் தலைநகராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தாஹா முஸம்மில்...**

# கிழக்கின் குரல்



# தொழில் வழிகாட்டல் ஆலோசனை மூலம் எதிர்காலத்தை சிறப்பாக்கி கொள்ள முடியும்

## திருமலை மாவட்ட அரசாங்க அதிபர்

(முள்ளிப்பொத்தானை குறூப், றொட்டவெவ குறூப் நிருபர்கள்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலை வாய்ப்பு, தொழிற்கல்வி பிரிவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆகியன இணைந்து நடாத்தும் மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தையானது செவ்வாய்க்கிழமை (09) விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல்கள் தொடர்பில் சரியான ஆலோசனைகளைப் பெற்று திறன்களை விருத்தி செய்வதன் மூலம் தமது எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றிக் கொள்ள முடியுமென, நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரம தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது, இளைஞர், யுவதிகளுடைய திறனை விருத்தி செய்யும் நோக்கில் பல அமைச்சுகள் இணைந்து பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறானதொரு வேலைத்திட்டமாக இவ் வேலைத்திட்டம் இன்று நடாத்தப்படுகின்றது. இதன் மூலம் உயரிய பலனை பெற்றுக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை வெற்றி கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இவ் வேலைத்திட்டத்தில் உள்ளூர், வெளியூர் தொழில் தருநர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் மற்றும் 50 இற்கும் மேற்பட்ட அரச, தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இம் மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தையானது இளைஞர், யுவதிகள், தொழில் தேடுபவர்கள், தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பான தகவலை பெற விரும்புவர்கள்,பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடை விலகியோர், என அனைவருக்கும் பயன் பெறும் வகையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானம், நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் மீளாய்வு கூட்டம்



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் மீளாய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (09) மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் உள்ள கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

முரண்பாடு செயல்திறன் மாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்பாடுகள் எனும் தொனிப்பொருளில், தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத குழுவினால் நடாத்தப்பட்ட இந் நிகழ்வு, மாவட்ட இணைப்பாளர் இரா மனோகரன் மற்றும் துணை இணைப்பாளர் அப்துல் ஹமீட் முன்னிலையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழுவினால் 2015 முதல் இதுவரை (2023) மாவட்டத்தில் வன்முறைகளைத் தவிர்த்தல், பிணக்குகளுக்கான மத்தியஸ்தம், முரண்பாடுகளைத் தீர்த்தலும் முன்னெச்சரிக்கையும், தலைமைத்துவப் பண்பை வளர்த்தல், மனித உரிமைகள், இலத்திரனியல் அச்சு ஊடகங்களில் ஊடக ஒழுக்க நெறி முறைகளுக்கமைய செய்திகளை பிரசுரித்தல், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள், சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் பன்மைத்துவ செயற்பாடுகள் பற்றி மீளாய்வு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் பன்மைத்துவ சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பின்னூட்டல் செயற்பாடுகள் பற்றி கலந்து கொண்டவர்கள், 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் முன்மொழிவுகள் பெறப்பட்டதோடு, செயற்படுத்தும் நிகழ்ச்சிநிரல்களும் முன்மொழியப்பட்டன.

# கிண்ணியாவில் மினி சூறாவளி



(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, காக்காமுனை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மயில்தீவு கிராமத்தில் செவ்வாய்க்கிழமை (9) நண்பகல் 1.45 மணியளவில் வீசிய மினி சூறாவளியினால் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் எட்டு வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளதோடு, இரு வீடுகளில் கூரைகள் முழுமையானதாகவும், ஏனைய ஆறு வீடுகளின் கூரைகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# சர்வதேச குடும்பநல தினத்தை முன்னிட்டு ஊழியர்கள் கௌரவிப்பு



(தோப்பூர் குறூப் நிருபர்)

சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர் தினத்தை முன்னிட்டு, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செயற்படும் 22 குடும்பநல உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, மூதூர் கட்டைபறிச்சான் கிராமிய சுகாதார நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (9) இடம்பெற்றது.

இந் நிகழ்வில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி, உதவி சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்டோரின் சேவையை பாராட்டி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இக்கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி முகைதீன் பாவா ஹில்மி, ஏனைய அதிதிகளாக மூதூர் உதவி சுகாதார வைத்திய அதிகாரி அஞ்சலி, மூதூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.எம்.அரூஸ், கட்டைபறிச்சான் கிராம உத்தியோகத்தர், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவிலில் நடமாடும் சேவை; பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு

(ஒலுவில் விசேட, அட்டாளைச் சேனை தினகரன் நிருபர்கள்)

பொத்துவில் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை செவ்வாய்க்கிழமை (09) பொத்துவில் பிரதேச செயலகத்தில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் பொத்துவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஸாரப் மற்றும் திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய இந்நடமாடும் சேவையின் மூலம் பொத்துவில் பிரதேசத்தில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத காணிப் பிரச்சினைகள் மற்றும் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகரத்துப் பதிவு தொடர்பான விடயங்கள், தொலைந்து போன தேசிய அடையாள அட்டைக்கான



பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதிகள் என்பன வழங்கப்பட்டதாக பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் தெரிவித்தார்.

நீண்ட காலமாக அரச காணியில் குடியிருப்பாளர்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல், காணிகளுக்கு எல்லையிடல், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், உரிமம் மாற்றம் செய்தல், காணி உறுதிக்கான விண்ணப்பம் செய்தல் போன்ற சுமார் 110 பிரச்சினைகளுக்கு விண்ணப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், சிறு பிரச்சினைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் இஸ்லாம் பாடத்துக்கு தோற்றும் சாதாரண தர மாணவர்களின் அடைவுமட்டத்தை, அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கருத்தரங்கில், அஷ்ஷேய்க் மௌலவி நிஸ்பர் விரிவுரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.

(படம் – நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# கதிர்காம காட்டுப்பாதை ஜூன் 12இல் திறக்கப்படும்

(காரைதீவு குறூப் நிருபர்)

கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூன் 29 ஆம் திகதி மூடப்படும் என, செவ்வாய்க்கிழமை (9) கதிர்காமத்தில் மொனராகலை அரசாங்க அதிபர் மற்றும் அம்பாறை அரசாங்க அதிபர் முன்னிலையில் இடம் பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் காட்டுப் பாதை திறப்பு தொடர்பிலான முன்னோடிக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி பகல் உகந்தை முருகன் ஆலயவளாகத்தில் நடைபெறவிருக்கிறது. கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. அதேவேளை உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜுலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.



அக்கரைப்பற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "எம்.ஐ எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்"அதனது சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் நடவடிக்கைளுக்கு அமைவாக, நிலையத்தின் ஆளுநர் சபையினர் அதன் தலைவர் பொறியியலாளர் ஜௌபர் இஸ்மாயில் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரிடம் ஆவணமொன்றை கையளித்த போது.

(படம் – அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# பயணிகள் தரிப்பிடத்தை திருத்துமாறு வேண்டுகோள்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடம், பல வருடங்களாக கூரை உடைந்த நிலையில் உள்ளது. கடும் வெப்பமான காலநிலை மற்றும் மழை பெய்யும் வேளைகளில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும், பொது மக்களும் பயணிகள் தரிப்பிடத்தில் தரித்து பேருந்துகளில் பயணிக்க முடியாத நிலையில் உள்ளது.

எனவே இதற்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக மீளமைத்து பயணிகளுக்கு உதவுமாறு பொது மக்களும், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# யானைகளால் அட்டகாசம்

(பாலமுனை விசேட நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் பொருளாதார ரீதியாக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பொத்துவில் பிரதேசத்தின் அல்ஹுதா, இன்ஸ்பெக்டர் ஏத்தம், ஆர்.எம்.நகர், செங்காமம், றொட்டை ஆத்திமுனை, ஒருக்காமலை, ஹிஜ்ரா நகர் மற்றும் களப்புக்கட்டு ஆகிய பகுதிகளில் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிக்குள் தினமும் நுழையும் காட்டு யானைகள் அங்கு பல்வேறு சேதங்களை ஏற்படுத்திவிட்டுச் செல்கின்றன. இரவு வேளைகளில் இப் பிரதேசங்களுக்கு வருகை தரும் யானைகள் குடிசை வீடுகள், பாதுகாப்பு வேலிகள் போன்றவற்றை உடைத்து குடியிருப்பு பகுதிகளிலுள்ள பயிர்கள், செடிகொடிகள் மற்றும் பயன்தரும் மரங்களையும் அழித்துவிட்டு செல்வதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொத்துவில் பிரதேச மக்கள் யானைத் தாக்குதல்களினால் உயிர் உடமைகள் என பல்வேறு இழப்புக்களை சந்தித்து வரும் நிலையில், தொடர்ந்தும் இப் பிரதேசத்தில் யானைகளின் அச்சுறுத்தல்கள் காணப்படுவதனால் பிரதேச அரசியல்வாதிகள், அதிகாரிகள் மக்களின் உயிர் உடமைகளை பாதுகாப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

பட்டிருப்பு வலயக் கல்வி பணிமனைக்குட்பட்ட, மண்டூர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை புரிந்த கணபதிப்பிள்ளை நகேந்திரன் தனது 35 வருட கால கல்விச் சேவையில் இருந்து செவ்வாய்க்கிழமை (09) ஓய்வு பெற்றுள்ளார்.

1988 இல் தனது முதல் நியமனத்தை பட்டிருப்பு வலயக் கல்வி பணிமனைக் குட்பட்ட கோயில் போரதீவு விவேகானந்தா வித்தியாலயத்தில் பெற்று கடமையாற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை, திருமலை விபுலானந்தா கல்லூரி, காத்தான்குடி பதுரியா வித்தியாலயம், மட்டக்களப்பு



மகா ஜனா கல்லூரி, கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம், மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம், குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம், மண்டூர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார்.

இவரது கல்விச் சேவையை பாராட்டி மண்டூர் மகா வித்தியாலயத்தில் அதிபர் தலைமையில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

# மணல் கடத்தல்; ஒருவர் கைது

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெலிகொம் வீதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சட்டவிரோதமான முறையில் அனுமதிப் பத்திரமின்றி மணல் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைவஸ்த்து ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர் உழவு இயந்திரத்துடன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

# வடக்கின் உதயம்



யாழ். அச்சுவேலி ஆயுர்வேத வைத்தியசாலையை அண்டி வசிக்கும் 54 முதியோர்களுக்கு கனடா மிட்லன் மிடியா நிறுவன ஊழியர்களின் நிதியுவியில் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர், லயன் கலாநிதி நா. தனேந்திரன் உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கி வைத்தார். செல்வபுரம் செல்வ சனசமூக நிலையத்தில் வைத்து இவற்றை அவர் வழங்கி வைத்தார்.

# யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

## மக்களை விழிப்புடன் இருக்க பொலிஸார் அறிவுறுத்தல்

**யாழ். விசேட நிருபர்**

அண்மைக்காலமாக யாழ்ப்பாண நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு, பொலிஸார் நேற்று (09) அறிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் திருட்டு தொடர்பாக பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்துள்ளன.


வீடுகள் மற்றும் கடைகளுக்கு முன்பாக தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைத்துவிட்டு, ஒரு சில நிமிடங்களில் திரும்ப முடியுமெனும் நோக்கில் மோட்டார் சைக்கிள்களில் திறப்புகளை எடுக்காமலும், மோட்டார் சைக்கிள்களை இயங்கு நிலையில் வைத்துவிட்டும் சிலர் செல்லும் சந்தர்ப்பங்களை அவதானித்தே சிலர் இத்திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு திருடப்படும் மோட்டார் சைக்கிள்கள் அன்றைய தினம் மாலை அல்லது மறுநாளில் சன நடமாட்டமின்றிய பிரதேசங்களில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்படுகின்றன.

எனவே, மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தி வைத்துவிட்டு அவற்றின் திறப்புகளை தம்முடன் எடுத்துச் செல்லுமாறும், பொதுமக்களுக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்தி குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றதா? மோட்டார் சைக்கிள் திருட்டில் கும்பலாக யாராவது ஈடுபடுகின்றனரா? அல்லது ஒரிருவர் மாத்திரம் ஈடுபடுகின்றனரா எனும் கோணங்களில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# கொடிகாமம் விநாயகர் ஆலயத்தில் திருட்டு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி பிரதேசத்திலுள்ள விநாயகர் ஆலயமொன்றிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) திருட்டுப் போயுள்ளது.

இந்த ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமெராவை உடைத்துக்கொண்டு ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள், ஆலய விக்கிரகங்களின் கீழ் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான உலோகங்களையும் உண்டியல்களிலிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன், கமெராவின் Hard Disk ஐயும் இத்திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸாரிடம் ஆலய நிர்வாகத்தினர் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணையை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இளவாலையில் கிணற்றில் தவறி விழுந்து சிறுமி உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் பிரதேசத்தில் சிறுமியொருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த 2 வயதும் 6 மாதங்களுமேயான கருணாநிதி ரக்ஸியா எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சிறுமியின் தந்தை கடமைக்குச் சென்ற அதேவேளை, தாய் வீட்டு வேலைகளை கவனித்துக் கொண்டிருந்துள்ளார். இதன்போது, கிணற்றுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த இச்சிறுமி அதில் தவறி விழுந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சிறுமியை கிணற்றிலிருந்து மீட்டெடுத்து, தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அச்சிறுமி ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக, வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# புத்தூர் வாழைப்பழ தொழிற்சாலையை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்



யாழ்ப்பாணம், புத்தூர் பிரதேசத்திலுள்ள வாழைப்பழ ஏற்றுமதி தொழிற்சாலையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் பார்வையிட்டுள்ளார்.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் விவசாய நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தப்படும் திட்டத்துக்கமைய அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலையில் கதலி வாழைப்பழங்கள் பதனிடப்பட்டு, டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இதன் மூலம் சுமார் 250 விவசாயிகள் பயனடைந்துள்ளதுடன், கதலி வாழைப்பழங்களுக்கு நியாயமான விலையையும் யாழ். விவசாயிகள் பெறத் தொடங்கியுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் வாரமொன்றுக்கு 22,000 கிலோகிராம் கதலி வாழைப்பழங்களை யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்கின்ற போது, எமது மக்களின் பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியுமென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதன்போது, இம்முயற்சியை முன்னெடுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

# பூவரசன்குளத்தில் புதையல் தோண்டிய எண்மர் கைது

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாலம்பைக்குளம் வனப் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் 8 பேரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) மாலை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வனப் பிரதேசத்தில் சிலர் நுழைந்து சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டுவதாக பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய அப்பிரதேசத்தில் பொலிஸார் சுற்றிவளைப்பை நடத்தி இச்சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

# போலி நாணயத்தாள் அச்சிடும் இயந்திரத்துடன் கைதான யாழ். இளைஞருக்கு விளக்கமறியல்

**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**



போலி நாணயத்தாள்களை அச்சிடும் மின்னியல் இயந்திரத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 18 வயதுடைய இளைஞர் ஒருவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் 13 இலட்சம் ரூபா போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவன் உட்பட இருவரை ஆனையிறவில் பளை பொலிஸார் கைது செய்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்விரு சந்தேகநபர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் இவர்களுடன் தொடர்பை பேணிய 18 வயதுடைய இளைஞரை கடந்த திங்கட்கிழமை (08) இரவு யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.

இச்சந்தேகநபரை யாழ்ப்பாணத்தில் பொலிஸார் அடையாளம் கண்டு பின்தொடர்ந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை வீதியிலுள்ள விடுதியொன்றிலிருந்து பொதி எடுத்துச் செல்வதை பொலிஸார் அவதானித்து, இவரை வழிமறித்துச் சோதனையிட்டனர்.

அப்பொதியிலிருந்து இம்மின்னியல் அச்சு இயந்திரத்தை பொலிஸார் மீட்டுள்ளதுடன், இச்சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

இதனையடுத்து, இச்சந்தேகநபரை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) முன்னிலைப்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**




மஸ்கெலிய பிரதேசசபை செயலாளர் சிவராம் ராஜவீரன் அகில இலங்கை சமாதான நீதவானாக ஹற்றன் மாஜிஸ்திரேட் நீதவான் முன்னிலையில் நேற்றையதினம் சத்தியபிரமாணம் செய்துகொண்டார். மஸ்கெலிய நகரை பிறப்பிடமாகக் கொண்ட சிவராம் ராமேஸ்வரி தம்பதிகளின் புதல்வரான இவர் சென்.ஜோசப் கல்லூரியின் பழைய மாணவராவார். ஆசிரியராக அரச சேவையில் இணைந்துகொண்ட இவர் ஹற்றன் கல்வி பணிமனையிலும் சேவையாற்றியுள்ளார்.

பாடசாலை காலம் முதல் பல்வேறு சமூக சேவைகளின் நாட்டம் கொண்ட இவர் பாடசாலை பழைய மாணவர் சங்கம், மஸ்கெலியா சிவில் பொலிஸ் குழு, ஜோசபியன்ஸ் விளையாட்டு கழகம், MYCC விளையாட்டு கழகம் ஆகியவற்றின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# மலைச்சாரல்

# ஊவா மாகாணத்தில் சீரற்ற காலநிலை

**(ஊவா சுழற்சி நிருபர்)**



ஊவா மாகாணத்தில் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மழையுடன் பனிமூட்டம் நிலவுவதால் வாகன சாரதிகள் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக பதுளை மாவட்டத்தின் பதுளை, பண்டாரவளை, பசறை, வெலிமடை, சில்மியாபுர, பொறகஸ், ரத்தம்ப, ஊவா பரணகம, மஹியங்கனை, எல்ல ஆகிய பகுதிகளில் தொடர்ந்து சீரற்ற காலநிலை நிலவுகின்றது. சீரற்றகாலநிலை காரணமாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றி கொழுந்து பறிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமன்றி இதர தொழிலுக்கு செல்வோரும் வெகுவாக பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர். வெலிமடை, நுவரெலியா வீதியின் சில்மியாபுர, பொறகஸ், ஹக்கல பிரதேசம். பதுளை கண்டி வீதியில் ரந்தெனிய பிரதேசம், எல்ல வெல்லவாய வீதியின் இராவண எல்லை போன்ற பிரதேச வீதிகளில் அதிக பனிமூட்டம் நிலவுகின்றது. வீதிகளில் சறுக்கல் நிலை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே இவ்வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களை செலுத்துமாறும் இரவு நேரத்தில் பயணிப்போர் மஞ்சள் நிற விளக்குகளை பயன்படுத்துமாறும் போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊவா மாகாண பிரதம செயலாளராக தமயந்தி பறணகம நியமனம்



**{ஊவா சுழற்சி நிருபர்)**

வெற்றிடமாகவுள்ள ஊவா மாகாண சபை பிரதம செயலாளர் பதவிக்கு பதுளை மாவட்டச் செயலாளராக கடமையாற்றி வந்த தமயந்தி பறணகம நியமிக்கப்பட்டுள்ளார். ஊவா மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் பீ. வீ.ஜயரத்ன ஓய்வு பெற்றதையடுத்து வெற்றிடமாகவுள்ள பிரதம செயலாளர் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய ஊவா மாகாண ஆளுநரால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் நேற்றுமுன்தினம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் பெரிய தந்தை கைது

நோர்வூட், சாமிமலை ஸ்டொக்கம் தோட்டத்தில் இரண்டு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அவர்களின் பெரிய தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நோர்வூட் சாமிமலை ஸ்டொக்கம் தோட்டப் பகுதியில் 12 மற்றும் 13 வயதான இரண்டு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சிறுமிகளின் தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றார். இவர்களின் தந்தை மறுமணம் முடித்துள்ளார். இந்நிலையில் சிறுமிகள் பெரியதந்தையின் பராமரிப்பிலேயே வளர்ந்து வந்துள்ளனர்.

பெரிய தந்தையின் பாலியல் தொந்தரவுகள் குறித்து சிறுமிகள் தனது வகுப்பாசிரியரிடம் கூறியுள்ளனர். அதனையடுத்து பாடசாலை நிர்வாகத்தின் ஊடாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சிறுமிகள் இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தனர்.



ஹல்துமுள்ளை பிரதேச செயலகப்பிரிவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு கற்கை உபகரணப்பொதிகளும் அவர்களின் திறமையை பாராட்டி சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

பதுளை ஸ்பிரிங்வெளி பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பதுளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே பெருந்தோட்டத்திற்கு சொந்தமான வனப்பகுதியில் புதையல் தோண்டிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஸ்பிரிங்வெளி ப்ளொக் நல்லமல பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெசாக் தானசாலையில் கையடக்க தொலைபேசி திருட்டு;

## சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு

**(கம்பளை, அக்குறணை குறூப் நிருபர்கள்)**

கம்பளை தெல்பிட்டிய பிரதேசத்தில் வெசாக் தானசாலை வரிசையில் நின்ற யுவதியொருவரின் கையடக்க தொலைபேசியை திருடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் ஹிரான் ஏக்கநாயக்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

யுவதியின் கையடக்க தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

கம்பளை துனுக்கே பிரதேசத்திலிருந்து தனது மனைவியுடன் முச்சக்கர வண்டியில் தானசாலைக்கு வருகை தந்த சந்தேகநபர் வரிசையில் நின்றுகொண்டிருந்த யுவதியின் கையடக்க தொலைபேசியை திருடி தனது முச்சக்கர வண்டியில் மறைத்து வைத்துள்ளார்.

எனவே யுவதி காவலில் இருந்த பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். எனினும் பொலிஸார் சந்தேகநபரிடம் விசாரித்த போதும் அவர் மனைவியுடன் லொறியில் வந்ததாக பொய் சொல்லி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதன்போது சேவையிலிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் சந்தேகநபரிடம் வினவியபோதும் தான் அப்படி எதனையும் காணவில்லை என்றே கூறியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் சந்தேகநபரை பின்தொடர்ந்து நோட்டமிட்ட போது அவர் முச்சக்கர வண்டியில் மனைவியுடன் ஏறிச் செல்லமுற்பட்டுள்ளார். அப்போது பொலிஸார் யுவதியின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்திப் பார்த்த போது முச்சக்கர வண்டியினுள் தொலைபேசி ஒலி எழுப்பியமையால் சந்தேகநபர் கையும் களவுமாக அகப்பட்டார்.

**1964ஆம் ஆண்டின் 28ஆம் எண் நிலம் கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டபடி நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் (அத்தியாயம் 460) பிரிவு 7இன் கீழ் பிரகடனம்**

**பிரதேச செயலாளரின் கோப்பு இல:** BOP/4/4/1-89

**நில அமைச்சகம் கோப்பு எண் :** 4-3/3/2021/PI/153

பின்வரும் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள நிலங்கள் அரசாங்கத்தால் கையகப்படுத்தப் படுவதற்கு காத்திருக்கின்றன. மேலும் விபரங்களுக்கு எண் 2325/83 தாங்கி 2023.04.01 தேதியிட்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பாருங்கள்.

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | **காலி** |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | **போபெ போத்தல** |
| கிராம அலுவலர் பிரிவு | : | **எண் 117A மீபாவல** |
| கிராமத்தின் பெயர் | : | **மீபாவல** |
| காணியின் பெயர் | : | **உஸ்கொடவில மற்றும் வக்கட்டிய வெல** |
| வரைபடம் எண் | : | **810169 மண்டல எண்.01, தாள் எண்.03** |
| தொகுதி எண் | : | **01** |

**கையகப்படுத்தல் அதிகாரி**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம்**
**போபே போத்தல**

**திகதி : 2023.05.02**
**முகவரி : பிரதேச செயலகம்**
**போபே போத்தல,**
**காலி மாவட்டம்**

**1964 இல 28 காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்டவாறு காணி சுவீகரிக்கும் சட்டத்தின் 7(1) பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது தொடர்பு இலக்கம் : BD/KK/LND 2/9/8

காணி அமைச்சின் தொடர்பு இலக்கம் : 4-3/9/2016/WS/312

இங்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணிகளை அரசிற்கு பெற்றுக் கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 2023.04.01ம் திகதிய இல 2325/75 என்ற இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் (III) பிரிவைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவு | : | கந்தகெட்டிய |
| கிராமம் | : | கிவுலே கெதரகம (ஒரு பகுதி) (பூ.மு.பி.47) |
| அமைவிடம் | : | பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலகப் பிரிவின் 31 பீ கந்தகெட்டிய பிரிவின் கிவுலேகெதரகம |
| காணியின் பெயர் | : | கந்தகெட்டியஹேன |
| கெடெஸ்டர் வரைபட இலக்கம் | : | 710129 |
| துண்டு இலக்கம் | : | 142,144,145 |
| முழுக் காணியின் அளவு | : | 0.1012 ஹெக்டயார் |

**டி.எம்.யூ.ஐ.எஸ்.கே.திஸாநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**கந்தகெட்டிய**

**காணிப்பிரிவு,**
**பிரதேச செயலகம்**
**கந்தகெட்டிய**

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி பறிமுதல் செய்யும் (திருத்த) சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாக காணி பரிமுதல் செய்யும் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இலக்கம் - i. 3/ඉ/අත්පත් 1/ විල්ගමුව – කාණු පද්ධතිය
ii. 3/ඉ/අත්පත්/ විල්ගමුව – අතිරේක

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல - I. 4-3/7/2020/HW/165
II. 4-3/7/2021/HW/25

கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிலம்/ நிலங்கள் பொது நோக்கததிற்காக அரசாங்கத்திடம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு இலங்கை ஜனநாயக சோசலிச இல 2318/34 உடைய 2023.02.09ஆம் திகதியின் அரசாங்கத்தின் விசேட வர்த்தமானி பத்திரிகை அறிவித்தலை பார்க்கவும்.

**உப ஆவணம்**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | அலவ்வ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இல. 989, வில்கமுவ |
| கிராமம் | : | வில்கமுவ |

இடத்தின் பெயர் : I

குடா-ஓயா, அரத்தமடெ-எல, அரத்தமடெ வத்த அல்லது கலவளமுள்லேஹேன. லோலகடவத்த மற்றும் கலவளமுள்லே ஹேன லோலகட- மூக்கலான, வாகலபில்லேவ, குபல்கும்புரகமத்த, அரத்தமடெகும்புர, கோங்கஹாமுலவத்த, கோங்கஹாமுலஹேன, தங்கஹேனவத்த, ஹபுகஹாமுலவத்த, உபசகாவத்த, தங்கேவத்த மற்றும் தங்கெஹேனவத்த.

II

உபசகாவத்த அல்லது இடந்தகாவ ஹபுகஹாமுலவத்த அல்லது கபுகஹாமுல வத்த, குடா ஓயா, தங்கஹேனவத்த, தங்கேவத்த, கோங்கஹாமுலவத்த மற்றும் கோங்கஹாமுலஹேன.

| | | |
|---|---|---|
| வரைபட இலக்கம் | : | இறுதிக் கிராம வரைபட இல. 410-20-20 மற்றும் 410-19-19 |
| துண்டு இலக்கங்கள் | : | 708 இருந்து 762 மற்றும் 679 இருந்து 707 |

**எம்.ஆர்.எம்.எஸ். மல்லவ**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**காணி கையகப்படுத்தும் அதிகாரி,**
**அலவ்வ**

**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**அலவ்வ**
**28.04.2023**

# கழிக்கப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பாவனையின் பின்னர் அகற்றப்பட்ட இயந்திர பாகங்கள் 2023.05.18 மு.ப. 10.30 இற்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏல விற்பனை வளாகத்திற்கு பிரவேசிப்பதற்காக ஒருவரிடம் மீளளிக்கப்படாத ரூ. 100.00 தொகை அறவிடப்படுவதுடன், கேள்வி வைத்தல், விற்றல், முடிவுறுத்தல் - ஏல விற்பனை சபையினால் மேற்கொள்ளப்படும். ஏல விற்பனை சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கழிக்கப்பட்ட பொருட்கள்**

1. 500 KVA மின் பிறப்பாக்கி இயந்திரம்
2. சிகிச்சையக கழிவுப் பொருட்கள், தகன இயந்திரங்கள் பாகங்கள்
3. சடலங்கள் உள்ளிடும் அதி குளிரூட்டிகள்

விலை கோரியவுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக காசு செலுத்தி அன்றே அகற்றிக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு அகற்றப்படாத எந்தப் பொருட்களுக்கும் வைத்தியசாலையினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.

2023.05.16 பி.ப. 10.00 முதல் 12.00 வரை பொருட்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டிய.**
**091-2232250/ 091-2232176**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - பதுளை

# பெறுகை அறிவித்தல்

01. பதுளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் ஆரம்ப பராமரிப்பு சேவையை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் (PSSP) கீழ் பின்வரும் மருத்துவம் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குதல், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்காக முதன்மையாளர்கள் / தலைவர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வமான முகவர்கள் / பிரதிநிதிகளிடமிருந்து 2023 மே 12ஆம் திகதி முதல் 2023 ஜுன் மாதம் 01ஆம் திகதி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப் படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | **Medical Items** | | | |
| | **Package No.01 Bio Medical** | | | |
| 01 | Handheld Doppler | 25 | 120,000/= | 5,000/= |
| 02 | Infusion Pump | 15 | | |
| 03 | Syringe Pump | 15 | | |
| 04 | Laryngoscope sets (Adult) | 20 | | |
| 05 | Laryngoscope sets (Pediatric & Neonatal) | 03 | | |
| | **Package No.02 Theater** | | | |
| 01 | Hysterescope | 01 | 30,000/= | 3,000/= |
| | **Package No.03.Lab** | | | |
| 01 | 3 Part Haematology Analyzer | 02 | 50,000/= | 3,500/= |
| 02 | Laboratory Centrifuge (32 buckets) | 01 | | |
| | **Package No.04. MCH** | | | |
| 01 | Delivery Beds | 10 | 55,000/= | 3,500/= |
| 02 | Bathroom Scales | 150 | | |
| | **Package No.05. Dental** | | | |
| 01 | Lightcure Machine | 30 | 150,000/= | 7,000/= |
| 02 | Ultrasonic Scaler | 30 | | |
| 03 | Dental Apex Locators | 30 | | |
| 04 | Endo Motors | 30 | | |
| 05 | Mobile Dental Units | 10 | | |
| | **Package No.06. Eye Care** | | | |
| 01 | Magnification Lenses 90+D | 10 | 25,000/= | 2,500/= |
| | **Package No.07. Physiotherapy** | | | |
| 01 | Suspension Therapy Units | 1 | 50,000/= | 3,500/= |
| 02 | Infrared Lamp with 06 Bulbs | 3 | | |
| | **General Items** | | | |
| | **Package No.08 .IT** | | | |
| 01 | Dot matrix Printer - Salary | 7 | 90,000/= | 4,000/= |
| 02 | Dot matrix Printer – Letters | 20 | | |
| 03 | Photocopy Machine | 20 | | |
| 04 | Ink Tank Printer | 1 | | |
| 05 | Multimedia Projector | 30 | | |
| | **Package No.09 .Office Equipment** | | | |
| 01 | Office Chairs | 50 | 20,000/= | 2,500/= |
| 02 | Executive Chairs | 25 | | |
| | **Package No.10 .General** | | | |
| 01 | Grass Cutters | 10 | 40,000/= | 3,000/= |
| 02 | Washing Machine | 10 | | |

02. விலைமனு ஆவணங்களை 2023 மே 12ஆம் திகதி முதல் 2023 மே மாதம் 31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பதுளை, மஹியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
   அ. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கும் எழுத்து மூல விண்ணப்பம்
   ஆ. பதுளை, மஹியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
03. விலைமனு ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் பதுளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2023 ஜுன் மாதம் 01ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதுளை சுகாதார சேவைகள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
06. விலைமனுக்கள் 2023 ஜுன் மாதம் 01ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்விற்கு வருகை தருமாறு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.
07. இயைபுடைய பெறுகை தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 மே மாதம் 22ஆம் திகதி பதுளை, மஹியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
08. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 055-2223581 அல்லது 055-2222430 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மஹியங்கனை வீதி,**
**பதுளை.**
**2023-05-11**

**Repeat Your Ad For Better Offers**

## வரையறுக்கப்பட்ட ரிகில்லகஸ்கட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - ரிகில்லகஸ்கட

## மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் பிரசித்த ஏல விற்பனை

வ/ப ரிகில்லகஸ்கட ப.நோ.கூ. சங்கத்தின் ரிகில்லகஸ்கட, பதியபெலல்ல, ஹேவாஹெட்ட, பல்லேபோவல, எலுமுல்ல வராகலவிட்ட, மந்தாரம் நுவர கோணகெலே. உதலுமட, தெஹிபே, ஹாலிஎல மற்றும் ஹப்பாவர ஆகிய கிராமிய வங்கிகளில் 2021.10.01 முதல் 2022.04.30 வரை (அவ்விரு தினங்கலுட்பட) அடகுவைத்து இன்று வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள் 2023.05.27 மற்றும் 2023.05.28 ஆகிய இரண்டு தினங்களிலும் மு.ப. 9.00 முதல் இச்சங்கத்தின் ரிகில்லகஸ்கட பிரதான அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**எம்.எம். ரூபசிங்ஹ, தலைவர்,**
**வ/ப, ரகில்லகஸ்கட ப.நோ.கூ. சங்கம்.**
**ரிகில்லகஸ்கட,**
**தொ.பே. 081-2365580**
**2023.05.08**

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# விலைமனுக்கோரல்

| இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1 | குருநாகல் வட்டப்பாதை கி.மீ.0+000, கி.மீ.2+000, கி.மீ.6+315 - கி.மீ.9+610 இடைப்பட்ட பகுதி நிலக்கீழ் இடுகை (Asphalt wearing Course) வழங்குதல் |
| 2 | நிக்கவெரடிய - மொரகொல்லாகம - சியபலங்கமுவ பாதை கி.மீ.41+650, கி.மீ.44+050, இடைப்பட்ட பகுதி நிலக்கீழ் இடுகை (Asphalt wearing Course) வழங்குதல் |

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச கொள்முதல் செயற்குழுவின் (வடமேல் மாகாணம்) தவிசாளரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக தேசிய விலைமனுகோரல் செயல்முறைக்கு அமைவாக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமுனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பில் விருப்புள்ள மனுதாரர்கள் www.rda.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக 2023.05.11 திகதி முதல் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வடமேல் மாகாண கொள்முதல் செயற்குழு**
**மாகாண பணிப்பாளர் காரியாலயம்**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**குருநாகல்.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1. | தெற்கு அதிவேக வீதியின் EOM&M பிரிவிற்கு 156 எண்ணிக்கையான Lane Signal Light Heads கொள்வனவு செய்தல் (விலைக்கோரல் இல. RDA/EOM &M/PRC/2023/ELE/09) |
| 2. | ஒரு வருட காலத்திற்கு மத்திய அதிவேக வீதியின் EOM&M பிரிவில் நிறுவப்பட்டுள்ள வளிச் சீராக்கி இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் (2023/2024) (விலைக்கோரல் இல. RDA/EOM&M/PRC/2023/ELE/10) |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-05-11ஆம் திகதி முதல் 2023-05-30ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## Tender for the supply of Colonoscope with Support System

**Tender No.: Q 233/23**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் **Colonoscope with support system** ஐ வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2023.06.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் இப்போது அழைக்கின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் ஊடாக நடாத்தப்படும்.

நிகரான உபகரணத்தை வழங்குவதில் முன்னைய அனுபவத்தையுடைய உற்பத்தியாளர்கள்/ முகவர்கள் / கம்பனிகளாக விலைமனுதாரர்கள் இருக்கலாம்.

2023.05.11 ஆம் திகதியிலிருந்து 2023.05.31 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் சாதாரண வேலை நாட்களில் இந்த வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக செலுத்தி ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை ஆவணத்தை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றும் (பிரதியொன்றுடனான சான்றிதழின் மூலப்பிரதி) விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் விலைமனுக்கோரல் ஆவணமானது இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என அடையாளமிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply of Colonoscope with support system – Q 233/23 – closing on 01.06.2023"** என அடையாளமிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2023.06.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுதாரர் 650,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றை விலைமனுவுடன் அனுப்புதல் வேண்டும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதியானவர் இந்நிகழ்வின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

மேலதிக விபரங்களுக்கு 0112778624 (நீடிப்பு: 3140) என்ற இலக்கத்தினூடாக வழங்கல் அலுவலகருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். விலைமனு ஆவணத்தை இலவசமாக பரீட்சிக்கலாம். விலைமனுவின் முழுவதையும் அல்லது பாகமொன்றை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**



# மக்கள் வங்கி

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 26.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைககள் கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| **ஏல விற்பனை நிகழும் திகதி** | 27.05.2023 மற்றும் 28.05.2023 |
| **ஏல விற்பனை நிகழும் இடம்** | மக்கள் வங்கி - இரத்தினபுரி நகரக் கிளை முதலாம் மாடி (குடுகல்வத்தை) |
| **அடகு வைக்கப்பட்ட கிளைகள்** | எம்பிலிப்பிட்டிய, பெல்மடுல்ல, உடவளவ, கொடஹவெள, ரக்வான, கஹவத்த, பலாங்கொட எஹலியகொட, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தொட்ட, குருவிட்ட, கிரிஎல்ல, நிவித்திகல, கலவான, பல்லேபெத்த |
| **அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்** | படலங்கல, கொலொன்ன, செவனகல, ஓபநாயக்க, பம்பஹினை, வெலிகெபொல, எஹலியகொட, இரத்தினபுரி புதிய நகரம், வேவெல்லவத்த, வெலிஓப, அயகம, கரவிட்ட |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
**தொலைபேசி இல. 045-2223084, 045-2230818**

1961 www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

# பிரதேச சபை வரவு – செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிக்கோவையின் 6(1) பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2024 ஆம் ஆண்டிற்காக நாரம்மல பிரதேச சபையில் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வரவு-செலவுதிட்ட அறிக்கையின் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஆலோசனைகள் இருப்பின் 2023.06.30ம் திகதிக்கு முன் எனக்கு சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

**2023.05.08 ம் திகதி**
**நாரம்மல பிரதே சபை தலைமையகத்தில்**

**செயலாளர்**
**பிரதேச சபை**
**நாரம்மல**

**தொ.பே - 037-2249275**
**பெக்ஸ் : 037-2249681**
**மின்னஞ்சல் : narammalaps@gmail.com**

## கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமமொன்றை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

"வரையறுக்கப்பட்டது" என்ற சொல்லை சேர்க்காமல் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் பதிவு செய்வதற்காக "இலங்கை பூனை பராமரிப்போர் சங்கம்" (Ceylon Feline Club) என்ற பெயரிலும் செயற்பாணியிலும் சங்கமொன்றை தாபிப்பதற்கான உரிமமொன்றின் பணிப்புரையொன்றிற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தை தாபிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகள் பின்வருமாறு:

(i) இலங்கையிலுள்ள பூனை தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாளுதல்.
(ii) அனைத்து பூனைகளினதும் நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் அதற்கு மேலாக கலப்பற்ற பூனை இனங்களை இறக்குமதி செய்தல் மற்றும் பராமரித்தல்.
(iii) இரு வகையான அடையாளம் காணப்பட்ட கலப்பற்ற இனங்களின் இரு பரம்பரையின் பூனைகளின் சந்ததிகளின் அடையாளாம் காணப்பட்ட பராமரிக்கப்படும் அனைத்து பூனை இனங்களையும் பதிவு செய்தல்.
(iv) சம்பியன்ஸிப்கள் மற்றும் ஏனைய பூனை இனங்களின் காட்சிகளை ஊக்குவித்தல் மற்றும் நடாத்துதல்.

எந்தவொரு நபர், சங்கம் அல்லது நிறுவனமானது இந்த விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால், அவ்வாறான ஆட்சேபனைகளை இந்த அறிவித்தலின் 21 நாட்களுள் கடிதமொன்றின் மூலம் கம்பனிகள் பதிவாளர் நாயகம், "சமாகம் மெதுர", 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10. என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**டி பி பீரிஸ்**
**சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்**
**2023 மே 9 ஆம் திகதியன்று.**

## கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமமொன்றை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

"வரையறுக்கப்பட்டது" என்ற சொல்லை சேர்க்காமல் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் பதிவு செய்வதற்காக "இலங்கை அமெரிக்க கோரை நாய்கள் சங்கம்" (Ceylon American Bully Kennel Club) என்ற பெயரிலும் செயற்பாணியிலும் சங்கமொன்றை தாபிப்பதற்கான உரிமமொன்றின் பணிப்புரையொன்றிற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தை தாபிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகள் பின்வருமாறு:

(i) இலங்கையிலுள்ள கோரை நாய்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாளுதல்.
(ii) கோரை நாய்களின் நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் அதற்கு மேலாக கலப்பற்ற கோரை நாய் இனங்களை இறக்குமதி செய்தல் மற்றும் பராமரித்தல்.
(iii) அனைத்து கோரை நாய் இனங்களையும் பதிவு செய்தல்.
(iv) சம்பியன்ஸிப்கள் மற்றும் ஏனைய கோரை நாய் இனங்களுக்கான நாய் காட்சிகளை ஊக்குவித்தல் மற்றும் நடாத்துதல்.

எந்தவொரு நபர், சங்கம் அல்லது நிறுவனமானது இந்த விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால், அவ்வாறான ஆட்சேபனைகளை இந்த அறிவித்தலின் 21 நாட்களுள் கடிதமொன்றின் மூலம் கம்பனிகள் பதிவாளர் நாயகம், "சமாகம் மெதுர", 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10. என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**டி பி பீரிஸ்**
**சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்**
**2023 மே 9 ஆம் திகதியன்று.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## நுகர்வு நெல்லை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரல்

# விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குரித்தான பின்வரும் அலகுகளில் உள்ள நுகர்வு நெல் தொகையை விற்பனை செய்வதற்காக பணிப்பாளர் பெறுகை குழுவினால் 2023-06-02ஆம் திகதி வரை தேசிய போட்டி விலை கோரல் நடைமுறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் / பண்ணைகள் | மொத்த நெல் தொகை (கி.கிராம்) | கேள்வி பிணை வைப்பு | | பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| | | பணமாக | வங்கிப் பிணை முறி மூலம் | |
| அரச விதை உற்பத்திப் பண்ணை - மஹஇலுப்பல்லம | 12800 | 6,400.00 | 12,800.00 | 2023-09-17 |
| பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் - மஹஇலுப்பல்லம | 166332 | 83,200.00 | 166,400.00 | |
| பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் - பொலன்னறுவை | 27969 | 14,000.00 | 28,000.00 | |

02. மேற்படி 1ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பண்ணை அலுவலகங்களில் வேலை நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்ணைகளுக்கு இயைபான பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக விசாரித்து அல்லது மேற்குறிப்பிடப்பட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 4000.00 ரூபாவை விவசாயத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு அல்லது மேற்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பி.வி.ப (விதைகள்) அலுவலகங்களுக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தில் அல்லது மேற்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பி.வி.ப (விதைகள்) அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் படிவத்தில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2023-05-12ஆம் திகதி முதல் 2023-06-01ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

04. கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட சகல கேள்விகளையும் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் கேள்விகளை மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விதாரர்களினால் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் அல்லது தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் 2023-06-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றவுடன் உடன் அவை திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதனை.**
**தொலைபேசி: 0812-388106/122**

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தெற்கு அதிவேக வீதியின் (கொடகம முதல் மத்தள வரை) அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் விஸ்தரிப்பிற்கு விளக்குகள் மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்

**ஒப்பந்த இல. RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/64**

01. மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் அதிவேக வீதியின் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு (**EOM&M**) பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
02. விலைமனுக்கள் 2023-06-01ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முடிவுறுத்தப்படும்.
03. மேலதிக தகவல்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மேலும் பெலியத்த, கஹவத்த, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 047-2251892, 0766265264, 0763179185 தொலைநகல்: 047-2251891, மின்னஞ்சல்: prcbeleom.rda@gmail.com)

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மார்பக சிகிச்சை ஆலோசனை நிலையங்களுக்காக 26 மார்பக சுயபரீட்சித்தல் Mannequins ஐ கொள்வனவு செய்தல் புற்றுநோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

### *சுகாதார அமைச்சு*

26 மார்பக சுயபரீட்சித்தல் Mannequins ஐ கொள்வனவு செய்வதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் "E" பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| NCCP/GOSL/CPED/01/2023 | மார்பக சிகிச்சை ஆலோசனை நிலையங்களுக்காக 26 மார்பக சுயபரீட்சித்தல் **Mannequins** ஐ கொள்வனவு செய்தல் | 26 | 130,000.00 | 1000.00 |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை புற்றுநோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்சித்திட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2023 மே 11 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2023 மே 31 ஆம் திகதியன்று வரையும் அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2023 மே 30 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான இலங்கை ரூபாவில் 1,000 ரூபாவை (ஆயிரம் ரூபாவை மாத்திரம்) செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள புற்றுநோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் புற்றுநோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சிதத்திட்ட அலுவலகத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2023 மே 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் 2023 மே 31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு உடனடியாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இந்த விலைமனுக்களுக்கான அழைத்தலின் அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்த அனைத்து விலைமனுதாரர்களும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்குபெறுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
5. இந்த கொள்வனவு தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் சுகாதார அமைச்சின் "E" பெறுகைக் குழுத் தலைவர் பொறுப்பேற்க மாட்டார். 26 மார்பக சுயபரீட்சித்தல் Mannequins 26 மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்வதற்காக கொள்வனவு செய்யப்படுகின்றன.

**பணிப்பாளர், புற்றுநோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம்,**
**555/5, பொது சுகாதார கட்டிடத்தொகுதி,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி : 011-2368627**
**தொலைநகல் : 011-2368627**
**மின்னஞ்சல் : nccpsl@yahoo.com**

### சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

# மருத்துவ உபகரணங்கள் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல் – 2023

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ

1. பின்வரும் மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்காக 2023-06-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையும் சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பணிப்பாளரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| உபகரணங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மதிப்பீட்டுக் கிரயம் (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| AB Scanner | 01 | 1,000.00 | 104,000.00 | 5.2 |
| Cardiac Monitor | 01 | 500.00 | 8,000.00 | 0.4 |
| Mini Autoclave Machine | 01 | 500.00 | 8,000.00 | 0.4 |
| Collegen Cross Linking Machine | 01 | 500.00 | 20,000.00 | 1.0 |
| LED Light Source ( External ) | 01 | 500.00 | 20,000.00 | 1.0 |
| Medical Instruments (List provided ) | | 500.00 | 44,000.00 | 2.2 |

2. பெறுகைக்கான மதிப்பீட்டுக் கிரயம் 5 மில்லியன் ரூபாவை விஞ்சுமானால் விலைமனுதாரர் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. உபகரணங்களின் உள்ளூர் தயாரிப்பாளர்களின் பிரதிநிதிகள்/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவில் பங்குபெறுவதற்கு தகுதியுடையவராவர்.
4. பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து 2023-05-11ஆம் திகதி முதல் 2023-06-05ஆம் திகதி வரையுமான காலப்பகுதியில் (பொது விடுமுறை மற்றும் வார இறுதி நாட்கள் நீங்கலாக) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, நிர்வாக அதிகாரியிடமிருந்து (தொலைபேசி: 011-2258861-4) விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம்.
   அ. சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   ஆ. சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை கணக்காளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு.
   இ. வியாபார பதிவு சான்றிதழின் மூலப் பிரதியின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று.
   ஈ. முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்களின் உற்பத்திகளுக்கான உள்ளூர் முகவர்களாக நியமித்து வழங்கப்பட்ட சான்றிதழொன்று/கடிதமொன்று.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு 2023-06-07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகக் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்களைத் தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Tender for the supply of ....................................../2023"** என்ற சொற்பதங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-06-07ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாகவே சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
7. விலைமனுக்கோரல் ஆவணங்களை சீதுவ, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை நிருவாக அலுவலரின் அலுவலகத்தில் வேலை நேரங்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை சீதுவ, விஜய குமாரதுங்க வைத்தியசாலை நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி: 011-2258861-4 தொலைநகல்: 011-2258865.**

**CMO**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**
**2023-05-11.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**110**

**மாருதி கார்கள்**
விற்பனைக்கு

CP KQ-6581 Maruti Alto 2011, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பேஎ071454 295 8. 027750

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP JY-3697 Bajaj 2005, SP QF-9242 Bajaj 2006, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 027748

**Repeat Your Ad For Better Offers**

# RAJARATA UNIVERSITY OF SRI LANKA - MIHINTALE

## INVITATION FOR BIDS

## Procurement of Supply, Installation, Commissioning and Maintenance of Prefabricated Package Type Sewage and Wastewater Treatment Plants

1. The Chairperson, Department Procurement Committee (DPC) on behalf of the Rajarata University of Sri Lanka now invites sealed bids from eligible and qualified bidders Procurement of Supply, Installation, Commissioning and Maintenance of Prefabricated Package Type Sewage and Wastewater Treatment Plants for the Hostel Premises at Rajarata University of Sri Lanka
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Assistant Bursar, Supplies Division, Rajarata University or Sri Lanka Tel: 025-2266513 or mail to **rjtsupplies @rjt.ac.lk** and inspect the Bidding Documents from 12.05.2023 to 30.05.2023 between 09.00 a.m. and 02.30 p.m. at any working days.
4. Bidder should have a valid business registration in relevant field with 5 years' experience and successfully completed as main supplier within the last 5 years, of at least one contract complexity similar to the scope of supply described in Section V (Schedule of requirement).
5. A complete set of Bidding Documents may be purchased by interested bidders on the submission of a written application to the address below and upon payment of a non-refundable fee of Twelve thousand five hundred Rupees (Rs.12,500.00) on working days from 12.05.2023 to 30.05.2023 between 09.00 a.m. and 02.30 p.m. The method of payment will be in cash to the University Shroff counter.
6. A Pre-bid meeting will be held at 10.30 a.m. on 18.05.2023 at the Administration Board Room of the Administration Building of Rajarata University of Sri Lanka.
7. Bids will be closed at 2.30 p.m. on 31.05.2023 at the Main Boardroom of the Administration Building, Rajarata University of Sri Lanka.
8. The Contract Number, Description and the Bid opening date should be marked on the top left corner of the envelope. Sealed bids should be delivered to reach the Chairperson, Department Procurement Committee, Rajarata University of Sri Lanka, Mihintale by registered post or insert into the "Tender Box" available at the Office of the Registrar, 2nd Floor, Main Administration Building, Rajarata University of Sri Lanka, Mihintale on or before 2.30 p.m. (tender closing time ) on 31.05.2023 (tender closing date). All late bids will be rejected and returned to the bidder unopened. Proofs of posting will not be accepted in case of any delay. Bids will he opened immediately after the closure of the bid submission time at 2.30 p.m. on 31.05.2023 at the Main Board Room. Bidders or their authorized representatives(one representative for each bidder) may participate at the bid opening.
9. Final decision will be made by the Department Procurement Committee.
10. Each Bid shall he accompanied by a Bid Security for an amount given in the bidding data.

**Chairperson**
**Department Procurement Committee,**
**Rajarata University of Sri Lanka.**
11.05.2023




## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6449(MP) | Spares for Kato KA – 900 Mobile Crane | 75,000.00 | 1,000.00 | 2023/06/08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6452(MP) | 14 Nos. Main Hoist Wire Ropes for 41T ZPMC and Mitsui STS Cranes at JCT | 175,000.00 | 3,500.00 | 2023/06/08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/22/PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT – 06 Nos. | 50,000.00 | 1,000.00 | 2023/05/31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/13/52 | Rubber Fenders – 64 Nos. | 30,000.00 | 1,000.00 | 2023/05/31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்ட நரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 மே 12 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

## பகிரங்க அறிவித்தல்

அவ்வப்போது திருத்தப்படும் 1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தின் 18ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு தங்கள் நியதிச்சட்ட அறிவிப்புகளைச் சமர்ப்பித்தவர்கள், ஆனால் இப்போது வரை,

- ❖ சட்டத்தின் 19வது அத்தியாயத்தின் பிரகாரம் நியதிச்சட்ட முடிவிற்காக சட்டம் அமுலாக்கப்படும் நாள் முதல் தற்போது வரை காணியை அளந்து, எல்லையை நிர்ணயித்ததன் பின் அவர்களின் அல்லது அவர்களின் வாரிசுகளின் பெயர் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாமலிருத்தல்
- ❖ சட்டத்தின் 14வது அத்தியாயத்தின் கீழ் சட்டம் அமுலுக்கு வரும் திகதியில் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அறிவிப்பாளரின் பிள்ளைகள் அல்லது குடும்பத்திற்குள் மாற்றமாக காணியைப் பெற்றுக்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்ட பெற்றோர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள்
- ❖ சட்டத்தின் 22(1)ஈ அத்தியாயத்தின் கீழ் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்று ஆனால் இதுவரையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காணி அளவு கிடைக்கப்பெறாத விவசாயக் காணி தொடர்பில் அதிகபட்சமாக விதிக்கப்பட்ட வேளையில் 18 வயதிற்குக் குறைவாக இருந்தாலும், காணிச் சீர்திருத்த சட்டம் அமுலாக்கப்படும்போது காணியின் உரிமையைக் கொண்ட நபர் அல்லது வாரிசு
- ❖ அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வரம்பிற்குக் கீழ் விவசாயக் காணியை வைத்திருக்கும் நபர்கள், அல்லது அவர்களது வாரிசுகள் அவர்களது சொந்தக் காணியை ஆணைக்குழுவுக்கு மாற்றியிருந்தால், அதன் விளைவாக மாற்றுக் காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டத்தின் 22(1) ''அ'' அத்தியாயத்தின் கீழ் உரிமை உண்டு.

தமது உரிமைத்துவம் அல்லது வாரிசுரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம் சகிதம் பிரதான அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகார சபை பணிப்பாளரிடமிருந்து அல்லது www.lrc.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விபரப் படிவத்தைப் பூர்த்தி செய்து பின்வரும் முகவரியில் அமைந்துள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் அந்நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள விசேட ஆவணப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது lrc.legal.obligation@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் அல்லது இதில் ஏதாவது ஒரு முறையில் மட்டும் அனுப்பி இதற்கான விசேட இலக்கமொன்றை 2023 மே மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது. மேலும் மேற்கூறப்பட்ட திகதிக்குப் பின்னர் சட்டபூர்வமான காணியைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**சட்டத்தரணி நிலந்த விஜேசிங்க,**
**தலைவர்,**
**காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.**

**இல. 475, கடுவளை வீதி,**
**பத்தரமுல்ல.**
**2023-04-25.**

# ஆசிய கிண்ண தொடரை இரு நாடுகளில் நடத்த இலங்கை, பங்களாதேஷ் எதிர்ப்பு

## பாகிஸ்தான் தொடர்ந்து பிடிவாதம்



ஆசிய கிண்ணத் தொடரை இரு நாடுகளில் நடத்தும் கலப்பு முறை திட்டத்திற்கு இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்படும் ஆசிய கிண்ணத் தொடரில் அரசியல் பிரச்சினை காரணமாக இந்தியா வர மறுத்த நிலையிலேயே இந்திய போட்டிகளை ஐக்கிய அரபு இராச்சியத்திலும் ஏஞ்சிய போட்டிகளை பாகிஸ்தானிலும் நடத்தும் திட்டத்தை பாக். கிரிக்கெட் சபை பரிந்துரைத்தது.

எனினும் இது ஏற்பாட்டியல் ரீதியில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று ஆசிய கிரிக்கெட் கௌன்சில் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு ஒரு மாதத்திற்கு முன் வரும் செப்டெம்பர் மாதமே ஆசிய கிண்ண தொடரை நடத்த ஏற்பாடாகியுள்ளது. எனினும் போட்டிக்கு இடையே இரு நாடுகளுக்கு பயணிப்பதன் ஏற்பாட்டில் பிரச்சினை மற்றும் செப்டெம்பர் முதல் பாதியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிலவும் கடும் வெப்பம் குறித்து இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகள் சுட்டிக்காட்டியுள்ளன.


"இந்த கலப்பு முறையை எதிர்ப்பதாக ஆசிய கிரிக்கெட் கௌன்சிலுக்கு நாம் எழுதியுள்ளோம்" என்று இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் மொஹான் டி சில்வா கிரிக்கின்போ இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார். "என்றாலும் இதற்கு அப்பால் இறுதி முடிவு எட்டப்படவில்லை. ஆண்டின் இந்தக் காலப்பகுதியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடும் வெப்பமான காலநிலை இருக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பாகிஸ்தானில் ஆடுவதில் ஆட்சேபனை இல்லை என்று இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகள் உறுதி செய்திருப்பதாக குறிப்பிட்டிருக்கும் பாக். கிரிக்கெட் சபை, கடந்த ஆசிய கிண்ண தொடரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் செப்டெம்பர் மாத காலப்பகுதியிலேயே ஆடியதாக சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் பொதுவான இடமாக இம்முறை ஆசிய கிண்ணத்தை நடத்த தயாராக இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது. "தொடரை இலங்கையில் நடத்த வாய்ப்பு கிடைத்தால் அதனை செயற்படுத்த தயாராக இருக்கிறோம். பாகிஸ்தான் உத்தியோகபூர்வமாக போட்டியை நடத்தும் நாடாக இருக்கும்" என்று டி சில்வா குறிப்பிட்டார்.

எனினும் பாகிஸ்தான் தனது நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக உள்ளது. "பாகிஸ்தான் மற்றும் பொது இடம் என்ற முறை நிராகரிக்கப்பட்டால் நாம் ஆசிய கிண்ணத்தில் ஆடமாட்டோம் என்பதை சபை மீண்டும் வலியுறுத்துகிறது" என்று பாக். கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# உலகக் கிண்ண தகுதிகாணில் ஆடும் பத்து அணிகளும் உறுதி



அயர்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டதை அடுத்து உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறும் வாய்ப்பை அயர்லாந்து இழந்தது. இதன்படி தென்னாபிரிக்க அணி இந்தியாவில் இந்த ஆண்டு கடைசியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற்றதோடு அயர்லாந்து, இலங்கை அணியும் பங்கேற்கும் தகுதிகாண் போட்டியில் ஆடவுள்ளது.

சிம்பாப்வேயில் வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான பத்து அணிகளும் தற்போது உறுதியாகியுள்ளன.

இதில் அமெரிக்கா, ஐக்கிய அரபு இராச்சியம், ஸ்கொட்லாந்து, ஓமான் மற்றும் நேபாளம் ஆகிய இணை அங்கத்துவ நாடுகளும் ஒருநாள் சுப்பர் லீக் பட்டியலில் கடைசி ஐந்து இடங்களை பிடித்த நெதர்லாந்து, சிம்பாப்வே, மேற்கிந்திய தீவுகள், இலங்கை மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளுமே தகுதிகாண் போட்டிகளில் ஆடவுள்ளன.

இந்தத் தொடரில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகளே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

# இலங்கையின் வளர்ந்துவரும் அணிக்கு ஜப்பானில் வெற்றி



ஜப்பான் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வளர்ந்துவரும் கிரிக்கெட் அணி ஜப்பான் தேசிய அணியுடன் நேற்று நடைபெற்ற முதலாவது டி20 போட்டியில் 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

சானோ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்பான் அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 97 ஓட்டங்களை பெற்றது. இதன்போது டலோன் பீரிஸ் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை வளர்ந்துவரும் அணி 15.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 98 ஓட்டங்களை எட்டியது. ரன்மித் ஜனசேன ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களை பெற்றார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் இரண்டாவது போட்டி இதே மைதானத்தில் இன்று (11) நடைபெறவுள்ளது.

# ஐ.சி.சி வருவாயில் இந்தியா ஆதிக்கம்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் புதிய வருவாய் பகிர்வு முறையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பெரும் செல்வாக்கு செலுத்தும் வகையில் ஐ.சி.சியின் அடுத்த நான்கு ஆண்டு வருவாயில் சுமார் 40 வீதத்தை பெறவுள்ளது.

தற்போது ஒரு முன்மொழிவாக இருக்கும் இந்த வருவாய் பகிர்வு முறை பற்றிய விபரத்தை கிரிக்கின்போ இணையதளம் வெளியிட்டுள்ளது. இதில் இந்தியா 2024–27 காலப்பகுதியில் ஆண்டுக்கு தோராயமாக 230 மில்லியன் டொலர்களை ஈட்டவுள்ளது. இது ஐ.சி.சியின் மொத்த வருவாயில் 38.5 வீதமாகும்.

இதற்கு அடுத்து இங்கிலாந்து 6.89 வீதமாக 41.33 மில்லியன் டொலர்களையும் அவுஸ்திரேலியா 6.25 வீதமாக 37.53 மில்லியன் டொலர்களையும் ஈட்டும். இந்த வரிசையில் 10ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை வருடத்திற்கு 4.52 வீதமாக 27.12 மில்லியன் டொலர்களை ஐ.சி.சியிடம் இருந்து பெறும்.

# அமெரிக்க டி20 தொடரில் தசுன் ஷானக்க ஒப்பந்தம்



இலங்கை அணித்தலைவர் தசுன் ஷானக்க அமெரிக்காவில் நடைபெறவுள்ள மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் சியட்டல் ஓர்கஸ் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் இலங்கையின் 5ஆவது வீரராக தசுன் ஷானக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் போட்டித்தொடருக்காக ஏற்கனவே வனிந்து ஹஸரங்க, செஹான் ஜயசூரிய, அஞ்சலோ பெரேரா மற்றும் லஹிரு மிலந்த ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர்.

ஆறு அணிகள் பங்கேற்கும் மேஜர் லீக் டி20 கிரிக்கெட் தொடரில் லொஸ் ஏஞ்சல்ஸ் நைட் ரைடர்ஸ், டீம் டெக்ஸஸ், வொசிங்டன் பிரீடம், சியட்டல் ஓர்கஸ், எம்.ஐ. நியூ யோர்க் மற்றும் சென் பிரான்சிஸ்கோ யுனிகோர்ன்ஸ் ஆகிய அணிகள் விளையாடவுள்ளன. இந்தத் தொடர் எதிர்வரும் ஜூலை 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெப்லிங் கிண்ணத்தை வென்றது நாவிதன்வெளி பிரதேச செயலகம்



பெரியநீலாவணை விசேட நிருபர்

டெப்லிங் வெற்றிக் கிண்ணத்தை நாவிதன்வெளி பிரதேச செயலக அணி கைப்பற்றியது.

டெப்லிங் நிறுவனத்தின் 22ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிறுவனத்தின் இணைப்பாளர் ரி. ராஜா ஏற்பாட்டில் பிராந்தியத்திலுள்ள விசேட தேவையுள்ள கல்வி அலகு மாணவர்கள் மற்றும் டெப்லிங் நிறுவனம் பணியாற்றுகின்ற பிரதேச செயலக அணிகளுடன் திருச்சபையின் அணிகள் உள்ளடங்கிய அணிகள் பங்கேற்ற இந்தத் தொடர் கல்முனை உவெஸ்லி மைதானத்தில் கடந்த திங்களன்று (08) நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் கல்முனை திருச்சபை அணியை எதிர்கொண்ட நாவிதன்வெளி பிரதேச செயலக அணி 6 ஓவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 60 ஓட்டங்களை 5.4 ஓவர்களில் எட்டியது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய படையினரால் இரு பலஸ்தீனர் கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் நேற்று (10) இரு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். காசா மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஜெனினின் தென் பகுதியில் உள்ள கபாடியா சிறு நகரில் 19 மற்றும் 24 வயது இளைஞர்களே இஸ்ரேலிய துருப்புகளால் சுடப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான இஸ்ரேலிய படைகள் அந்த நகரில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டு பல வீடுகளுக்குள் ஊடுருவியதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

"இந்தத் தாக்குதலின்போது படையினர் கார் ஒன்றின் மீது சூடு நடத்தி அதில் இருந்த இருவரை கொன்று மூன்றாமவருக்கு காயம் ஏற்படுத்தினர்" என்று வாபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் வாகனத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்தே படையினர் பதிலுக்கு சூடு நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை காசா மீது இஸ்ரேல் நேற்று தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக நடத்திய வான் தாக்குதல்களில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டு மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரை இஸ்ரேலிய படையினரின் தாக்குதல்களில் குறைந்தது 123 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# இந்தியா–ரஷ்யா உறுதி

ரஷ்யாவும் இந்தியாவும் தங்களுக்கிடையிலான இரு தரப்பு நல்லுறவை பல தளங்களிலும் ஒத்துழைப்புடன் வலுப்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளன.

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்றுள்ள உயர் மட்டக் கூட்டமொன்றில் இந்த உறுதிப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய மற்றும் இந்திய பிரதிநிதிகள் தலைமையில் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான கூட்டு செயற்குழுக் கூட்டம் மொஸ்கோவில் நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்திற்கு ரஷ்ய தரப்பில் வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஒலெக் சிரோமோலோடோவ்வும் இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் (மேற்கு) சஞ்ஜை வெர்மாவும் தலைமை தாங்கியுள்ளதோடு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

# இம்ரான் கானின் கைதை அடுத்து பாகிஸ்தான் எங்கும் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதை அடுத்து நாடெங்கும் ஆர்ப்பாட்டம் வெடித்திருப்பதோடு அவர் மீதான வழக்கு விசாரணை நேற்று (10) இடம்பெற்றது.

இந்த விசாரணைக்காக பொலிஸ் விடுதி ஒன்று நீதிமன்றமாக மாற்றப்பட்டதாக உள்ளூர் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. இம்ரான் கான் கைது செய்யப்பட்டிருக்கும் அல் காதிர் அறக்கட்டளை வழக்கு மீதான விசாரணையே நேற்று இடம்பெற்றது. இதில் இம்ரான் கானும் தோன்றி இருந்தார்.

இதன்போது இம்ரான் கானுக்கு 14 நாள் விளக்கமறியல் அளிக்க தேசிய பொறுப்புக்கூறல் பணியகத்தின் சட்டத்தரணி கோரியதோடு அதற்கு கானின் வழக்கறிஞர் எதிர்ப்புத் தெரிவித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டங்களில் இருவர் கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுற்றிவளைப்புகளை நடத்தும் பொலிஸார் இம்ரான் கானின் கட்சி ஆதரவாளர்களை கைது செய்து வருகின்றனர். முன்னாள் பாக். கிரிக்கெட் அணித் தலைவரான இம்ரான் கான் மீது ஊழல் மற்றும் தேசதுரோகம் தொடர்பில் பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அரசியல் நோக்கம் கொண்டவை என இம்ரான் கான் கூறி வருகிறார்.

நாடெங்கும் இணையத்தள சேவைகள் முடக்கப்பட்டுள்ளன. உள்துறை அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாக பாகிஸ்தான் தொலைத்தொடர்பு நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதோடு சில நெடுஞ்சாலைகளும் முடக்கப்பட்டுள்ளன. பிரதான நகரங்களில் போக்குவரத்து நெரிசலும் குறைவாக இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டங்கள் நீடித்து வரும் நிலையில் தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி பாரிய பேரணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதோடு தேசிய அளவில் வேலை நிறுத்தத்திற்கு தஹ்ரிக்கே இன்சாப் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இதில் இம்ரானின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர், லாகூர் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

வீதிகளில் சென்ற பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைத்ததுடன், இராணுவ கொமண்டர் இல்லத்தை சூறையாடியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், பிரிட்டன், கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இம்ரானின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் தூதரக அலுவலகங்களுக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணமான பஞ்சாமில் மாத்திரம் 945 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.